விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 247 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 07 சனிக்கிழமை (23.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

அதிர்கிறது கொழும்பு

# முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது

## 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுப் பிரிவுத் திணைக் களத்தால் நேற்றுக் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)



கைவிலங்குடன் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்படும் ரணில்

## ரணிலின் கைது திட்டமிட்ட செயலா?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் கைது ஒரு திட்டமிட்ட செயலா? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமம்

ரணில் கைது தொடர்பில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர்



07ஆம் பக்கம் பார்க்க

## ரணிலின் வழக்கு நடைபெற்ற நீதிமன்றில் மின் தடை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த போது, கோட்டை நீதவான் நீதிமன்ற அறையில் திடீரென மின்சாரம் துண்டிக்கப் பட்டது.

சில நிமிடங்கள் நீடித்த இந்த மின்தடை காரண மாக, விசாரணை நடவடிக் கைகள் இடைநிறுத்தப்பட் டன.

நேற்றுப் பிற்பகல் குற்றப் 15ஆம் பக்கம் பார்க்க

## அரச நிதியை ரணில் முறையற்றுப் பயன்படுத்தவில்லை

### ஐக்கிய தேசியக் கட்சி விளக்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிதியைப் முறைகேடாகப் பயன்படுத்தவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி விளக்க மளித்துள்ளது.

பிரித்தானியாவின் வோல் வர்ஹம்டன் பல்கலைக்கழ கம், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய அழைப்பிதழ் கடிதத்தின் நகலை ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது 15ஆம் பக்கம் பார்க்க

## சந்நிதியானுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல் வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக் கிழமை மதியம் கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள் ளது. 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் கொட்டடியில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு





15ஆம் பக்கம் பார்க்க

## ரணிலைத் தொடர்ந்து மேலும் பலர் கைதாகலாம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் பலர் கைதாகலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் வழக்குத் தொடர் பில் இன்னும் பலர் கைது செய்யப்படவுள்ளதாக வழக் கறிஞர் திலீப பீரிஸ் தெரிவித் துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர் பான வழக்கு விசாரணைக்கு 15ஆம் பக்கம் பார்க்க

## இரவில் தூக்கம் இன்மை அரியாலையில் விபரீத முடிவெடுத்த பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இரவில் தூக்கம் இன்மை காரணமாக விபரீத முடிவெ டுத்த பெண் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த புஷ்பவதி விஜயரட் ணம் (வயது-75) என்பவரே உயிரிழந்தவராவார். 15ஆம் பக்கம் பார்க்க

## வாந்தி எடுத்த பெண் மரணம் யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வாந்தி எடுத்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று மரண மடைந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் கந் தர்மடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான 15ஆம் பக்கம் பார்க்க

## காலில் வீக்கம் ஏற்பட்ட இளம் குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

காலில் வீக்கம் ஏற்பட்ட இளம் குடும்பப் பெண் ஒரு வர் மரணமடைந்துள்ளார்.

இதில் பூநகரி ஆலங்கேணி யைச் சேர்ந்த கௌதமன் தமிழ்நிலா (வயது-24) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண்ணுக்கு மூன்று மாதங்களுக்கு முன் னர் காலில் வீக்கம் ஏற்பட்டு பூநகரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று சுகம் பெற்றி ருந்தார்.

மீண்டும் கால் வீங்கியதை அடுத்து இம்மாதம் 14ஆம் திகதி 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலைக் கைது செய்தது அநுர அரசாங்கத்தின் தவறு

## பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்



முன்னாள் ஜனாதிபதி ரணிலைக் கைது செய்தது அநுர அரசாங்கம் செய்த தவறு எனப் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கோட்டை நீதிமன்ற வளாகத்தில் நேற்று(22) ஊடகங்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது என்பதோடு நாமும் சட்டத்தை மதிக்கின்றோம். சட்டத்தின் வழி செல்லும் ஆட்சியை விரும்புகின்றோம்.

ஆனால் ஜனாதிபதிகள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் முழுநேர வேலையாட்கள். அவர்கள் 8 மணிநேரம் வேலை செய்யும் அரச ஊழியர்கள் போல அல்ல.

நான் அமைச்சராக அரச வாகனத்தில் யாழ்ப்பாணம் சென்று அநுராதபுரத்தில் எனக்கொரு நண்பர் இருந்தால் அவரையும் சந்தித்து விட்டு அவரின் அழைப்பின் பேரில் விருந்தையும் உட்கொண்டு வருவேன்.

இதனை ஒரு தவறாகக் கருத முடியாது. ஆனால் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதிகள் ஆகியோர் ஊழல் செய்கின்றார்களா? என்பதை விசாரிக்க வேண்டும்.

ஆகவே எனது நண்பரும் ஜனாதிபதியுமான அநுரகுமார திஸாநாயக்கவிடம் இது போன்ற சிறிய விடயங்களைக் கருத்தில் எடுக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளார். (ம-7)



முன்னாள் ஜனாதிபதி ரணிலின் பிணை மனு விசாரணையில் அவருடன் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அமர்ந்திருக்கும் போது...

# ரணில் மனைவிக்குப் புற்றுநோய் நீதிமன்றில் சட்டத்தரணி

முன்னாள்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க இதய நோய், நீரிழிவுநோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல உடல்நலப்பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவரின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

கோட்டை நீதிமன்றத்தில் நேற்று நடந்த பிணை தொடர்பான விசாரணைகளிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவரைப் பராமரிக்க ரணில்மட்டுமே இருப்பதாகவும்வழக்கறிஞர் கூறியுள்ளார்.

தனது கட்சிக்காரரின் பிணை மனுவைப் பரிசீலிக்கும் போது இந்தச் சூழ்நிலைகளை கணக்கில் எடுத்துக் கொள்ளுமாறு அவர் நீதிமன்றத்தை வலியுறுத்தியுள்ளார்.(ம-7)

# நீதிமன்ற வளாகத்தில் திரண்ட ரணில் ஆதரவாளர்கள்



(கொழும்பு)

கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக ரணில் விக்கிரமசிங்கவின் அதிகளவான ஆதரவாளர்கள் நேற்றுத் திரண்டிருந்தனர்.

குற்றப் புலனாய்வுத் துறையினரால் நேற்றுப் பிற்பகல் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டிருந்த நிலையில், நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

இந்த நிலையில் நீதிமன்றத்திற்கு முன்னால் திரண்டிருந்த ரணில் ஆதரவாளர்கள், "உங்களோடு நாங்கள் எப் போதும் இருக்கின்றோம்" என்று அழுது கூச்சலிட்டனர்.

அத்துடன் ரணிலுக்கு ஆதரவாகப் பெருமளவான அரசியல்வாதிகளும் நீதிமன்றத்தின் முன்னால் ஒன்று திரண்டிருந்தனர். (ம-7)

# மரண அறிவித்தல்



தோற்றம் 12.04.1947

மறைவு 20.08.2025

## திருமதி நித்தியானந்தம் சந்திரலேகா

சங்கம் வீதி சங்கத்தானையைச் சேர்ந்த திருமதி நித்தியானந்தம் சந்திரலேகா அவர்கள் கடந்த (20.08.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - ராசம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தங்கம்மா அவர்களின் பெறாமகளும் ஜெகதீசன் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் நித்தியானந்தம் அவர்களின் ஆருயிர் மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பாலகிருஷ்ணன் மற்றும் சிதம்பரநாதன், புஸ்பராணி, உருத்திரமூர்த்தி, காளிதாஸ், கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம், சிவசாமி, பரமேஸ்வரி மற்றும் மனோரஞ்சிதம், நாகூர்ச்செல்வம், ராசமலர், தங்கலட்சுமி, வசந்தராணி, ரஞ்சன் ஆகியோரின் மைத்துனியும் சிவஞானம், ரஜினி, நாதன், முகுந்தன், வசந்தன், சயந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுபதிராஜர், ரமேஸ், திருமகள், கவிதா, பிரதீபா, கவிதா ஆகியோரின் மாமியாரும் சிந்துஜா, திவ்யா, சங்கோஜன், சாகித்தியன், சரண்யா, நம்மியா, கீர்த்திகன், அனோஜன், ஜனனி, ஜீவிதன், கார்த்திகா, ஜான்சி, வக்சலன், சாயனா, ரக்ஷன், கெங்கேஸ்வரன், கிரிஷாந், குவேஜினி, சுகுமார், கதிர்ஷன், நிஷாந்தன் ஆகியோரின் பேர்த்தியும் அக்ஷயன், ஆதிரன், அர்த்தனா, ஆரதி, அதியன், விகான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சங்கம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல் : குடும்பத்தினர்

(C-3722)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா நேற்றையதினம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:சிவசாந்தன்)

# மோசடி அழைப்புகள் தொடர்பில் 1977 இற்கு முறையிடலாம்

## நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு

(கொழும்பு)

**வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமையாளர்களுக்கு, நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அதிகாரிகள் போல் நடித்து மோசடியான தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவந்துள்ளது.**

மோசடித் தொலைபேசி அழைப்புக்களில், சட்ட நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக, குறித்த வணிக நிறுவன உரிமையாளர்கள், மோசடியாளர்கள் வழங்கும் வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பு செய்யுமாறு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

நாட்டின் பல பகுதிகளிலிருந்து இதுபோன்ற முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால் இவ்வாறான மோசடிக்கு இரையாக வேண்டாம் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மோசடி அழைப்புகள் வந்தால் 1977 என்ற இலக்கத்திற்கு அல்லது 0771088 922 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தெரிவிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை, வணிக உரிமையாளர்களிடம் கேட்டுள்ளது. (நி)

# தபால் ஊழியர்களுக்கு இம்மாதம் சம்பளம் இல்லை

## வெளியான அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்களுக்கு இம்மாத (ஓகஸ்ட்) சம்பளம் வழங்கப்படாது என தபால் மா அதிபர் ருவான் சத்குமார அறிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

அத்துடன் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தி, மாதாந்த சம்பளம் பெற வேண்டுமானால் உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களுக்கும் எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

வேலைநிறுத்தம் காரணமாக இதுவரை சுமார் 140 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த தபால் மா அதிபர், என்றும், மத்திய தபால் நிலையத்தில் குவிந்து கிடந்த தபால் பைகள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

சம்பளம் வழங்குவதற்கு திறைசேரியிலிருந்து நிதி பெறப்பட வேண்டும் எனவும் வேலைநிறுத்தத்தின்போது சம்பளக் கொடுப்பனவுகளுக்கு நிதி விடுவிக்கப்படாது என தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே, கடமைக்குத் திரும்பியவர்களுக்கு மட்டுமே சம்பளம் வழங்கப்பட வாய்ப்புள்ளதாகவும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கடமைக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (நி)

# தேசிய பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டப் பாடத்தை இணைக்குமாறு வலியுறுத்து

(கொழும்பு)

தேசிய பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டப் பாடத்தை இணைக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவுக்கு எழுதிய கடிதத்தில், இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, சட்டம் அல்லது அதனுடன் தொடர்புடைய பாடத்தை ஆரம்ப கல்வித் தரத்தில் முதன்மைப் பாடமாகவும் உயர் தரத்தில் விருப்பத்துக்குரிய பாடமாகவும் அறிமுகப்படுத்துவதன் அவசியத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், பாடசாலை மட்டத்தில் சட்டக்கல்வி பொறுப்புள்ள மற்றும் தகவலறிந்த பிரஜைகளை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

பல்வேறு நாடுகள் ஏற்கனவே தங்கள் பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டப் பாடத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.

இந்தநிலையில், இலங்கையின் சட்ட மற்றும் கலாசார சூழலுடன் ஒத்துப் போகும் சட்டக் கல்விக்கு முழுமையான ஆதரவை வழங்கத்தயார் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீளம் பாய்தல் போட்டியில்
# தங்கம் வென்றது
## இளவாலை மெய்கண்டான்



மாகாண மட்ட நீளம் பாய்தல் போட்டியில் இளவாலை மெய் கண்டான் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.சன்சிகா தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி. சன்சிகா 4.77 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், பருத்தித்துறை சென் தோமஸ் ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.ஜெயசாளினி 4.69 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், அல்வாய் வடக்கு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.தனுஷா 4.62 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (நி-90)

# பெண்களுக்கான உயரம் பாய்தலில் மன்னார் பற்றிமா ம.ம.வி முதலிடம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த டபிள்யூ.வில்ஷியா தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

இதில் 14 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் டபிள்யூ. வில்ஷியா 1.47 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.ரேனுஷா 1.41 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். சப்திகா 1.41 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (நி-90)

## தட்டெறிதல் போட்டியில்
# கொற்றாவத்தை அ.த.க பாடசாலை தங்கப் பதக்கத்தை தனதாக்கியது



16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் கொற்றாவத்தை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த என். அம்சாயினி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் கொற்றாவத்தை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த என். அம்சாயினி 25.91 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும், வவுனியா கிடாச்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். சரணியா 24.37 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், கெருடாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த எம். கம்சா 23.47 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர். (நி-90)

# கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கி வைப்பு




இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினரின் ஏற்பாட்டில் மாவட்ட கிரிக்கெட் வீரர்கள் தேசியத்திற்கு முன்னோக்கி செல்வதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலைகள், மாவட்ட பயிற்றுவிப்பாளர், கழகங்களுக்கான கிரிக்கெட் உபகரணங்கள் மற்றும் பாதணிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் வைத்தியர் கற்கண்டு உதயசீலன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் பாலன் முகுந்தன் மற்றும் மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை பொறுப்பதிகாரிகள், பாடசாலை பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-90)

# சொந்த தேசிய சாதனையை முறியடித்தார் புவிதரன்

60 ஆவது இராணுவ மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருந்தவராசா புவிதரன் தமது சொந்த சாதனையை முறியடித்துள்ளார்.

இந்தப் போட்டியில், 5.18 மீற்றர் உயரத்தை தாண்டி புதிய தேசிய சாதனையை அவர் படைத்தார்.

இதனூடாக, 2024 ஆம் ஆண்டு கோலூன்றி பாய்தல் போட்டியில் 5.17 மீற்றர் உயரத்தை தாண்டி தாம் பதிவு செய்த சாதனையை அவரே முறியடித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித புதைகுழிக்கு நீதி கிடைக்க ஒன்று திரளுமாறு

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு!

(கண்டாவளை)

**நீண்டு செல்லும் செம்மணி புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை ஊடாகவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் அமைப்பினுடைய தலைவி. யோகராசா கலாரஞ்சினி தெரிவித்துள்ளார்.**

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்பாட்டில் எதிர்வரும் 30 ஆம் திகதி வட மாகாணத்தின் யாழ்ப்பாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட இருக்கிறது.

இந்தப் போராட்டம் தொடர்பில் நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது சங்க அலுவலகத்தில் மேற்கொண்ட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது செம்மணி புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை ஊடாகவே காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கும்.

எனவே வடக்கு கிழக்கில் இருக்கின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் உரிமைக்காகவும் எங்களுடைய காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவுகளுக்காகவும் நீதி கிடைக்க ஓரணியில் திரண்டு தங்களுக்கு நீதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (8-315-316)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (1461)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

தொடர்புகளுக்கு

077 839 3974, 076 889 1308


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் நாடகமும் அரங்கியல் பாட ஆசிரியை
திருமதி .சங்கீதா பிரபதாஜ்
அவர்களின் தாயார்



**அமரர். கந்தசாமி நாகம்மா**

அவர்கள் 21.08.2025 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
இனுவில் இந்துக் கல்லூரி. (5112)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 02 . 1947



மறைவு 15 . 09 . 2023

**அமரர். இளையதம்பி செல்லத்துரை (VMT)**

திதி – 23.08.2025

ஆண்டு இரண்டு சென்றாலும்
உங்களை இழந்த துன்பமும் துயரமும்
எங்கள் மனதை விட்டு மறையவில்லையே!!
உள்ளத்தில் பல கனவு ஒன்றாக நாமும் கண்டோம்
கனவெல்லாம் நனவாகும் காலம் வருமுன்னே
கண்மூடி மறைவாய் என்று
கனவிலும் நினைக்கவில்லை!
எத்தனை இன்னல்கள் வந்தாலும் அப்பா
நீங்கள் எம்மோடு இருக்கின்றீர்கள்
என்றெண்ணி வாழ்ந்தோம் ஆறாத்துயராய் ஆனதே
உங்கள் பிரிவு எம்முன்னே.
எம்முயிரான எங்கள் ஐயாவே!
நீங்கள் இறைவனடி சேர்ந்து ஈராண்டு
கடந்து விட்டாலும் நீங்கள் எப்பொழுதும்
எம்முன் நிற்கின்றீர்கள்!
நிழல் போலத் தொடர்ந்து வந்த அன்பே!
உணர்வோடு கலந்த உயிர் மூச்சை
உள்ளடக்கி கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்

மீளாத்துயருடன் : குடும்பத்தினர்

(5038)

## Lions International District 306 D12

**சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 D12 நடாத்தும் கார்னிவல் மற்றும் இலவச மருத்துவ சேவைகள்**

பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள திருவிழாக் காலத்துக்கான லயன்ஸ் காரியாலத்தில் கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும் இலவச இரத்த அழுத்த பரிசோதனையும் இலவச நீரிழிவு பரிசோதனையும் நடைபெற்று வருகின்றது.

மேலும் எமது காரியாலயத்தில் புதிய லயன்ஸ் அங்கத்துவம் பற்றிய மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 D12 நடாத்தும் **கார்னிவல்** 20.08.2025 தொடக்கம் 24.08.2025 வரை மாலை 5 மணி தொடக்கம் இரவு 12 மணிவரை நல்லூர், சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.




லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர் தொடர்புகளுக்கு : (Lions Eye Hospital Financial Contributors to Contact)

லயன். Dr K.M.பத்மநாதன் (லயன்ஸ் மாவட்ட ஆளுநர் 306 D12)
077 732 3702
district306d12@gmail.com

We Serve With Humanity (5100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலாபூசணம் வி.கே பஞ்சமூர்த்தி அவர்களின் ஒழுங்கமைப்பில் நாதஸ்வர இசைச் சங்கமமும் அதனைத் தொடர்ந்து இடம் பெறவுள்ள நாட்டிய அரங்கு நிகழ்வில் நடனம் - நாட்டிய கலாகேந்திரா மாணவர்கள், நட்டுவாங்கம் - திருமதி. துஸ்யந்தி சுகுணன், பாட்டு - அ. அமிர்தலோஜன், மிருதங்கம் - ம.லோகேந்திரன், வயலின் - பே. வேலதீபன், ஓகன் - ச.றஜீவன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

# யோகாப் பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப் பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப் பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சனை தீர, தைராய்டு பிரச்சனை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் வழங்கப் படும்.

பயிற்சிகளை 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம். பயிற்சிகளைத் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் க. சுப்பிரமணி அவர்கள் வழங்குவார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும். (3)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளையின் ஈராண்டுப் பொதுக்கூட்டம் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் YMCA மண்டபத்தின் கிளையின் தலைவர் ச. திரவியராசா தலைமையில் நடைபெற்றது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 200 | 250-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 200 | 120 | 200 |
| தக்காளி | 160 | 200 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 | 200 |
| கோவா | 250 | 250 | 300 | 250 | 300 |
| கரட் | 450 | 500 | 500 | 420 | 500 |
| பூசணி | 100 | 100 | 100 | 60 | 100 |
| புடோல் | 150 | 100 | 150 | 80 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-250 | 250 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 150 | 120 | 180 |
| பாகற்காய் | 400 | 600 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 150 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 220 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 250 | 300 | 280 | 400 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 | 200 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 150 | 120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 400 | 160 | 300 |
| போஞ்சி | 700 | 700 | 400 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 150 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-160 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 600 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 450 | 250 | 150 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 100 | 250 |

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.10 மணி முதல் 10.15 மணிவரையுள்ள கன்னி லக்ன சுபமுகூர்த்த வேளையில் இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.05 மணி முதல் 10.05 மணிவரையுள்ள சுபவேளையில் கர்மாரம்ப கிரியைகள் ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணைய்க் காப்பு சாத்த முடியுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

# குரு பூசை நிகழ்வு

கிளிநொச்சி ஸ்ரீ மத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகளின் 8 ஆவது வருட குரு பூசை நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணியளவில் ஸ்ரீ மத் வடிவேல் சுவாமிகள் சமாதிக் கோயில் பற்றிய கூட்டமும் நடைபெறவுள்ளதென ஆச்சிரம [illegible] அறிவித்துள்ளனர். (3)

# நல்லூரான் திருவடிக்கு... இன்று 26 ஆம் நாள் திருவிழா



## கா! நல்லைக் குமரேசனே!

ஈரைந்து ஆண்டுகள் வலம்புரியி லுனைப்போற்றி
யெழுதினே னென்பதெல்லாம்
சீர்பார்த்து நீசொன்ன வார்த்தையே யல்லாது
செப்பவே றொன்றுமிலையே
நீர்கொண்ட மேகங்க ளாய்நின்று தாயாகி
நின்கருணை தந்துவருள்வாய்
நேர்நின்று பார்என்றும் நின்பதம் பற்றினேன்
நிதிநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## நல்லைக் குகனே!

கல்லோ கற்சிலையோ கனியமுதோ- முருகா
என் நெஞ்சில் நிலைகொண்டாய் நீ
இல்லை ஒருதொல்லை யெனவாழ-உனைநாட
இல்லை எனக்கிங்கு வழியேனோ?
கல்லைக் கனியாக்கும் முல்லைவேந்தே- எம்
தொல்லை தீர்த்திடுவாய் நல்லைக் குகனே!

மாவை நா. கஜேந்திரன்

# மாற்று வலுவுடையோருக்கான விழிப்புணர்வு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களமும் இணைந்து JICA நிறுவனத்தின் ESPD வேலைத் திட்டத்தின் கீழ் மாற்று வலுவுடைய நபர்களுக்கான கனவு இலங்கை விழிப்புணர்வு நிகழ்வு இயற்கையுடன் கூடிய கெவி கடற்கரையில் கடந்த 18 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள் மற்றும் மனிதவள உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட செயலக சமூக சேவைகள் மற்றும் மனித வலு வேலை வாய்ப்புத் திணைக்களங்களின் மாவட்ட இணைப்பாளர்கள், தொழில் வழங்கும் நிறுவனங்கள், தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டுள்ள மாற்றுவலுவுடையவர்கள் மற்றும் சுயதொழில் முனையும் மாற்று வலுவுடையவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டம் செப்டெம்பரில் இரத்து!

## அமைச்சர் விஜிதஹேரத் அறிவிப்பு



(கொழும்பு)

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்திற்குள் இரத்து செய்யப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் விஜித ஹேரத்,

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு செப்டெம்பர் மாத தொடக்கத்தில் வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் உரையாற்றிய அவர், அதிகாரத்தை ஏற்றுக்கொண்ட குறுகிய காலத்திற்குள், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்க ஒரு குழுவை நாங்கள் நியமித்தோம்.

இந்தக் குழு பலமுறை கூடி, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

ஓகஸ்ட் மாத இறுதிக்குள் தொடர்புடைய திருத்தங்கள் தொடர்பான பணிகள் நிறைவடையும். அதைத் தொடர்ந்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பது குறித்த வர்த்தமானி அறிவிப்பு செப்டெம்பரில் வெளியிடப்படும்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பயங்கரவாத தடைச் சட்டம் அடுத்த மாதம் இரத்து செய்யப்பட்டு, புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் நேற்று பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (நி)

# வேலைநிறுத்த போராட்டத்தில் குதிக்கும் அரசாங்க மருத்துவர்கள் சங்கம்

(கொழும்பு)

அரசாங்க மருத்துவர்கள் சங்கம் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் வேலைநிறுத்தப் போராட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

மருத்துவர்களின் பணியிடமாற்றத்தின்போது சுகாதார அமைச்சின் அதிகாரிகள் வழங்கியிருந்த வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியே குறித்த வேலைநிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்க மருத்துவர்களுக்கான வருடாந்த இடமாற்றங்களின்போது முன்பிருந்த வெளிப்படைத்தன்மை இப்போது மாற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக கஷ்டப் பிரதேசங்களுக்கான இடமாற்றங்கள், வருடாந்த இடமாற்றங்கள் என்பன தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளப்படுகின்றது.

இடமாற்றங்களின் போது கட்டாயமாக நிரப்ப வேண்டிய கஷ்டப் பிரதேசங்களுக்கான 134 பணி இடங்கள் சுகாதார அமைச்சின் அதிகாரிகளால் தற்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அதன் காரணமாக கிராமப்புறங்களில் இருக்கும் 134 மருத்துவமனைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாகவே இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுகின்றது.

அதனைக் கண்டிக்கும் வகையில் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வேலைநிறுத்தப் போராட்டமொன்றை முன்னெடுக்க அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# நீதிமன்றில் முன்னிலையாகுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு



(கொழும்பு)

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு எதிர்வரும் 29 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு, ஒலிபெருக்கி மூல அறிவிப்பையும் நீதிமன்ற அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்ற அதிகாரிகள் நேற்று முன்தினம் அவரது வீட்டில் எழுத்துப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டனர்.

அத்துடன் மாலபே, தலஹேனவில் உள்ள அவரது இல்லத்தில் ஒலிபெருக்கி மூல அறிவிப்பையும் வெளியிட்டனர்.

முன்னதாக நீதிமன்றத்தைத் தவிர்ப்பதாகக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறித்து எழுத்துப் பூர்வ அறிவிப்பை வெளியிடுமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க லஞ்ச ஒழிப்பு ஆணையத்துக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் எதிர்வரும் 29 ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் அவர் உத்தரவிட்டார். (நி)

# சட்டம் அனைவருக்கும் சமமானது

## ஆனந்த விஜேபால தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் என அனைவருக்கும் சட்டம் சமமானது என பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் 'குற்றம் செய்திருந்தால், அவர்களை நீதியின் முன் நிறுத்த நாங்கள் ஒருபோதும் தயங்க மாட்டோம். சட்டத்தை அமுல்படுத்துவது அந்தஸ்தை அடிப்படையாகக் கொண்ட ஒன்றல்ல. குற்றம் நிகழும்போது, பாதிக்கப்பட்டவர்கள் மீது சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

அதுதான் தேசிய மக்கள் சக்தியின் முக்கிய நோக்கம். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் நீதியை உறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்' எனத் தெரிவித்துள்ளார். (நி)

# கிரவல் புழுதியால் சுவாசப் பாதிப்பு புதுக்காடு அழகாபுரி மக்கள் கவலை!



(தருமபுரம்)

கிளிநொச்சி இரணைமடு விமானப் படைத்தளத்திற்கு அண்மையில் கிரவல் அகழ்விற்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் தமது கிராமம் பாதிக்கப்படுவதாக புதுக்காடு அழகாபுரி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிரவலை கொண்டு செல்லும் 100 இற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்கள் புதுக்காடு அழகாபுரி வீதியின் ஊடாகச் செல்வதனால் தமது கிராமத்தின் புனரமைக்கப்படாத வீதி மேலும் சேதமடைவதாகவும் காற்று மாசு ஏற்படுவதாகவும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் தவறினால் டிப்பர் வாகனங்களை செல்லவிடாது போராட்டம் நடத்துவோம் எனவும் மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (8-316)



திருஞானசம்பந்தன் ஆத்மசகாயனின் 'இன்றைய தமிழன்' நூல் வெளியீட்டு விழா கொடிகாமம் நட்சத்திர மஹால் விருந்தினர் விடுதியில் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மறவன்புலவு சச்சிதானந்தன் நூலை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர் பா.வே. இராசரத்தினம் பெற்றுக்கொண்டார்.

(படம்: சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

### 574 ட்ரோன்கள்
### 40 ஏவுகணைகள் மூலம்

## உக்ரைனில் ரஷ்யா உக்கிர தாக்குதல்!



(கீவ்)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தீவிர தாக்குதல் நேற்று முன்தினம் உக்கிர நிலையை அடைந்தது. நேற்று முன்தினம் மட்டும் 574 ட்ரோன்கள், 40 ஏவுகணைகளை ரஷ்யா அனுப்பி உக்ரைனில் பெரும் தாக்குதல் நடத்தியுள்ளதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் 15இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் அண்ட்ரி சிபிஹா குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனின் லிவிவ், முகாசெவோ, டிரான்ஸ் கார்பதியா ஆகிய நகரங்களில் உள்ள பல்வேறு கட்டடங்கள், தொழிற்சாலைகள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும், இதுவரை நடத்தப்பட்ட உக்ரைன் - ரஷ்யா தாக்குதல்களில் இதுவே மிகப் பெரியது என உக்ரைன் தெரிவித்துள்ளது.

உலகில் இயங்கிவரும் இராணுவக் கூட்டமைப்புகளில், மிகவும் பலம் பொருந்தியதும் பழைமையானதுமான இராணுவக் கூட்டமைப்பான "நேட்டோ" வில் இணைவதற்காக உக்ரைன் முயற்சித்து வருகிறது.

உக்ரைனின் இந்த முயற்சிக்கு ரஷ்யா ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இதன் விளைவாக, 2022இல் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. சுமார் மூன்றரை ஆண்டுகளுக்கு மேல் இந்த யுத்தம் தொடர்ந்து வருகிறது.

உக்ரைன் - ரஷ்யா இடையே நிலவி வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரஷ்யா மற்றும் உக்ரைன் ஜனாதிபதிகளுடனும் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடனும் அலாஸ்காவில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். எனினும் அந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

அதனைத் தொடர்ந்து, உக்ரைன் மீது ரஷ்யா கொடூரத் தாக்குதல்களை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாகவே ஒரே இரவில் 574 ட்ரோன்கள், 40 ஏவுகணைகளை உக்ரைனுக்கு ரஷ்யா அனுப்பி, மிகப் பெரிய தாக்குதலை நடத்தியிருக்கிறது.

ரஷ்யாவின் இந்தத் தாக்குதலுக்கும் அதனால் விளைந்த அழிவுகளுக்கும் உக்ரைன் கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளது. (நி)



## நிபந்தனைகளுடனான பேச...
## இஸ்ரேல் பிரதமர் நெத...

(ஜெருசலேம்) 2023 ஒக்டோபர் 7 தாக்குதலின் போது சிறைபிடிக்கப்பட்ட அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பதற்காக இஸ்ரேல் ஹமாஸுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தும் என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

அதேநேரம், சர்வதேச கண்டனங்களை மீறி அதன் இராணுவம் காசா நகர் மீதான தாக்குதலைத் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஹமாஸ் தற்காலிக போர் நிறுத்த முன்மொழிவுக்கு ஒப்புக்கொண்ட பின்னர் இஸ்ரேலியப் பிரதமரின் இந்தக் கருத்துக்கள் முதல் முறையாக வந்துள்ளன.

இஸ்ரேலின் காசா எல்லைக்கு அருகே வீரர்களிடம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு பேசிய நெதன்யாகு, போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் பேச்சுவார்த்தைகள் இருக்கும் ஆனால் அது "இஸ்ரேலுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய விதிமுறைகளின்" அடிப்படையில் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை 60 நாள் போர் நிறுத்தத்திற்கான கட்டார் மற்றும் எகிப்திய மத்தியஸ்தர்களால் வரையப்பட்ட ஒரு திட்டத்திற்கு ஹமாஸ் ஒப்புக்கொண்டது.

இதன் மூலம் காசாவில் மீதமுள்ள பணயக்கைதிகளில் பாதிப் பேர் விடுவிக்கப்படுவார்கள் என்று கட்டார் தெரிவித்துள்ளது.

ஆனால், இதற்கு பதலளித்த நெதன்யாகு ஒப்பந்தத்தை ஏற்கவில்லை எனத் தெரிவித்தார்.

அவரது இந்த நிராகரிப்பு, எந்தவொரு 2023 ஒப்பந்தமும் ஒக்டோபரில் சிறைபிடிக்கப்பட்டு காசாவில் போராளிகளால் இன்னும் தடுத்து வைக்கப் பட்டுள்ள 50 பணயக்கைதிகளையும் விடுவிப்பதை உறுதி



செய... அர... கோ... இ... பேர்... நம்... ந... போ... போ... கை... பண... உட...

## வடகொரியாவின் ரகசிய ஏவுகணை தளம்
## அமெரிக்காவிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்

(பியாங்யாங்)

சீனாவுடனான வடக்கு எல்லைக்கு அருகில் வட கொரியா அமைத்துள்ள ரகசிய ஏவுகணை தளத்தால் கிழக்கு ஆசியா மற்றும் அமெரிக்காவின் பெரும் பகுதிக்கு கடுமையானஅணுசக்தி அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தகவல் கசிந்துள்ளது.

இதுவரை அறிவிக்காத சீன எல்லையிலிருந்து வெறும் 27 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது வடகொரியாவின் சின் பங் டோங் ஏவுகணைத் தளம். இங்கு 9 அணுசக்தி பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் அதன் வாகனம் உட்பட பாதுகாக்க முடியும்என்றேநம்பப்படுகிறது.

இந்தத் தளமானது வட கொரியாவால் இதுவரை அறிவிக்காத 15 முதல் 20 பாலிஸ்டிக் ஏவுகணை தளங்கள் மற்றும் அணுஆயுதங்கள் சேமிப்பு வசதிகளில் ஒன்றாகும். இந்த இரகசிய தளம் கிழக்கு ஆசியாவிற்கும் அமெரிக்க கண்டத்திற்கும் அணு ஆயுத அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்றே ஆய்வறிக்கை ஒன்று எச்சரிக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக கிம் ஜாங் உன் தலைமையின் கீழ் வடகொரியா தனது ஆயுதத் திட்டத்தை அதிகரித்துள்ளது.

அதன் ஆயுதப் படைகளை விரைவாக நவீனமய மாக்கி, புதிய ஆயுதங்களை உருவாக்கியுள்ளது மட்டுமின்றி அமெரிக்காவில் கிட்டத்தட்ட எந்த மாகாணத்தையும் தாக்கக்கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஒவுகணைகளையும் சோதனை செய்துள்ளது.

ரஷ்யா உடனான வடகொரியாவின் சமீபத்திய நெருக்கம், அந்த நாட்டிற்கு அதிநவீன தொழில்நுட்பங்களை சாத்தியமாக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த இரகசிய தளம் வடகொரியாவின் அணுசக்தி திட்டத்தை வலுப்படுத்தும் முயற்சியின் ஒருபகுதி என்றே கூறுகின்றனர். சீனாவிற்கு மிக அருகில் தளங்களை அமைப்பதன் மூலம், தாக்குதலைத் தடுக்க அரசியல் ஆதாயங்களைப் பயன்படுத்திக் கொள்ள வட கொரியாவால் முடியும். செயற்கைக்கோள் படங்களின்படி, தளத்தின் கட்டுமானம் 2004 இல் தொடங்கியது. மேலும் இது 2014 முதல் செயற்பட்டு வருவதாக அறிக்கை கண்டறிந்துள்ளது.

மேலும், தளத்தில் எந்த மாதிரியான பாலிஸ்டிக் ஏவுகணை சேமிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பிலான "தகவல் ஏதும் தெளிவாகத் தெரியவில்லை என்றே ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது வடகொரியாவிடம் 40 முதல் 50 அணு ஆயுதங்கள் இருக்கலாம் என்றேநம்பப்படுகிறது. (நி)




த... மா... வத... எது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# பச்சுவார்த்தைக்கு தயார் நதன்யாகு அறிவிப்பு!



செய்யும் என்ற இஸ்ரேலிய அரசாங்கத்தின் கருத்தை அடிக் கோடிட்டுக் காட்டுகிறது.

இஸ்ரேலிய அதிகாரிகள் சுமார் 20 பேர் இன்னும் உயிருடன் இருப்பதாக நம்புகின்றனர்.

நிலுவையில் உள்ள 60 நாட்கள் போர் நிறுத்தத் திட்டம், ஹமாஸ் போராளிகளால் காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 உயிருள்ள பணயக்கைதிகள் மற்றும் 18 உடல்களை விடுவிப்பதற்கும் அழைப்பு விடுக்கிறது.


இதற்கு பதிலாக இஸ் ரேல், நீண்டகாலமாக தடுத்து வைத்துள்ள சுமார் 200 பாலஸ்தீன கைதி களை விடுவிக்கும்.

தற்காலிக போர்நிறுத்தம் தொடங்கியதும், மீதமுள்ள பணயக்கைதிகளை திருப்பி அனுப்புவதை உள்ளடக் கிய நிரந்தரப் போர்நிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தை களை ஹமாஸும் இஸ் ரேலும் தொடங்க வேண் டும் என்ற திட்டம் உள் ளது.

இதனிடையே, கடந்த 10 நாட்களில் இஸ்ரேலிய டாங்கிகள் காசா நகரத்தை நெருங்கி வருவதால், ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளி யேறியுள்ளனர். (நி)

# உலகின் மிகப்பெரிய சூரிய மின் உற்பத்தி ஆலை

## 610 சதுர கி.மீ திபெத்தில் அமைக்கிறது சீனா



(பீஜிங்)

சீனா, 50 லட்சம் குடும் பங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு ஏற்ற வகை யில், 610 சதுர கி.மீ., பரப்பில் உலகின் மிகப் பெரிய சூரிய மின் உற்பத்தி ஆலையை திபெத்தில் அமைக்கும் பணியில் தீவிர மாக ஈடுபட்டு வருகிறது.

சீனா, கார்பன் - டை - ஆக்சைடு போன்ற பசுமை இல்ல வாயுக்களை மிகப் பெரிய அளவு வெளியேற் றும் நாடாக உள்ளது.

இது பருவநிலை மாற் றம், பூமியின் வெப்பநிலை உயர்வு போன்றவற்றுக்கு வழிவகுக்கிறது. சமீபத்திய ஆய்வுகள் அந்நாட்டின் கார்பன் உமிழ்வு, 2024 மார்ச் முதல் குறையத் தொடங்கியுள்ளதாகத் தெரி விக்கின்றன.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், 1சதவீதம் குறைந்துள்ளதாக கூறுகின் றன.

எதிர்வரும், 2060ஆம் ஆண்டுக்குள் கார்பன் உமிழ்வை, சீனா பூஜ்ஜிய மாக்க வேண்டும். இந்த இலக்கை எட்டு வதற்கு, அடுத்த ஒவ்வொரு ஆண்டும் கார்பன் உமிழ்வை, 3 சதவீதம் குறைக்க வேண்டும்.

இதற்காக சூரிய ஒளி மின் உற்பத்தி, காற்றாலை, அணு மின்சக்தி ஆகி யவற்றில் சீனா முதலீடு செய்து வருகிறது. இதில், சூரிய ஒளி மற்றும் காற்றாலை மின்சாரம் சுற்றுச்சூழலை கெடுக்காத தூய மின்சாரம் எனப் படுகிறது.

சீனாவின் மொத்த சூரிய மின்சக்தியின் அளவு, 10 லட்சம் மெகாவாட். இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும், 2.12 லட்சம் மெகாவாட் சூரிய மின் உற்பத்தி செய்யும், "பேனல்" களை சீனா நிறுவியுள்ளது. இது, அமெரிக்காவின் மொத்த சோலார் திறனான 1.78 லட்சம் மெகாவாட்டை விட அதிகம்.

இந்நிலையில், சீனாவின் மேற்கில் 2,000 கி.மீ இற்கு மேல் பரந்து விரிந்துள்ள திபெத் பீடபூமியில் உலகின் மிகப்பெரிய சூரிய மின் உற்பத்தி ஆலையை அமைக்கும் பணியில் அந்நாட்டின் மின்துறை ஈடுபட்டு உள்ளது.

இந்த ஆலை, 610 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் அமைக்கப்படுகிறது. இது அளவில், அமெரிக்காவின் சிகாகோ நகருக்கு இணையானது.

தற்போது இந்த பரப்பில், மூன்றில் இரண்டு பங்கு அளவிற்கு பேனல்கள் நிறுவப்பட்டுள்ளன. மொத்தமாக 70 லட்சம் பேனல்கள் அமைய உள்ளன. இதன் மூலம் 43,000 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதை வைத்து, 50 லட்சம் குடும்பங்களின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய முடியும். ஆனால், இந்த சூரிய மின் உற்பத்தி ஆலை மக்கள் அடர்த்தி குறைந்த மேற்கில் உள்ளது.

இங்கு இருந்து, சீனாவின் கிழக்கிற்கு மின்சாரத்தை கொண்டு செல்ல கிரிட் எனப்படும் கம்பி வடம் அமைக்கும் பணிகளும் முழுவீச்சில் நடக்கின்றன. (நி)

# பாப்பரசர் லியோ லெபனான் விஜயம்



(ஜெர்த்தா)

பாப்பரசர் பதினான்காம் லியோ, தனது முதல் வெளிநாட்டு பயண மாக லெபனான் நாட்டுக்குச் செல் வதாகத் தகவல் வெளியாகியுள் ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த முதல் பாப்பரசர் பதினான்காம் லியோ தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக, லெபனான் நாட்டுக்குச் செல் வார், என அந்நாட்டைச் சேர்ந்த கர்தினல் பெச்சாரா பௌட்ரஸ் ராய் தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து, சவுதி அரேபியாவைச் சேர்ந்த தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில்,

"பாப்பரசர் பதினான்காம் லியோ விரைவில் லெப னான் நாட்டுக்கு பயணம் மேற்கொள்வார். இருப் பினும், அந்தப் பயணம் எப்போது என்பது இன் னும் முடிவு செய்யப்பட வில்லை.

ஆனால், வரும் டிசம்பர் மாதத்திற்குள் அவர் எப் போது வேண்டுமானா லும் தனது பயணத்தைத் தொடங்கலாம்.

இதுகுறித்து, வாடிகன் அரசுதான் தெரிவிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன" என அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்து விழிப்புணர்வு

(அராலி)

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் வீதி விபத்து விழிப்புணர்வு கருத்தரங்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றது.

அண்மைக்காலமாக நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகமாக உள்ளதால் இவ்வாறான விழிப்புணர்வு கருத்தரங்கு மூலம் விபத்துக்களை குறைப்பது இதன் நோக்கமாகும்.

இதில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், போக்குவரத்து ஆணையாளர், சட்ட வைத்திய நிபுணர் க.மயூரன் சிறுவர் குழந்தை சத்திர சிகிச்சை நிபுணர் ப.சஜந்தன், உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-104)



சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (படம் - சுபேசன்)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1988- இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>1 இல் செவ்<br>தகைமை/தொழில்: Shop<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15934 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி-பா - 38<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA, Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15955 |
| பிறப்பு:1989-RC<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-BSc,work(Gov)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15935 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம் - மிருகசீரிடம்<br>கி-பா-36<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Dip in Nursing, BSc<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15957 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி-பா-36<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: A/L, Peon<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/15936 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்-ரோகினி<br>1இல்செவ்<br>கி-பா-44 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/15958 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>12இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-BSc, PHD(USA)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: B/15937 | பிறப்பு-1994-RC<br>நட்சத்திரம்-உத்தராடம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BFA, Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, தகுதியான ஆண்<br>தொ.இ: G/15961 |
| பிறப்பு: 1994 - இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>8இல் செவ்<br>கி-பா- 56 1/2<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: BSc, Nurse<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15938 | பிறப்பு-1998- இந்து<br>நட்சத்திரம்- சதயம்<br>9இல் சூரிசெவ்<br>கி-பா-29 1/2<br>உயரம்-5'3"<br>தகைமை/தொழில்: Dip in English, HNDE<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், சைவபோசனம்<br>தொ.இ: G/15963 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 431

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## நன்றி

ஒரு ஊரிலே ஒரு குரு இருந்தார்.

ஒருநாள் இரவு. ஏதோ ஒரு முக்கியமான புத்தகத்தை கையிலே வைத்து படித்துக்கொண்டிருந்தார்.

அவர் படித்துக்கொண்டிருந்தது ஒரு ஞானநூல். அதிலே ஆழ்ந்து போயிருந்தார் அந்தப் பெரியவர்.

அந்த நேரம் பார்த்து ஒரு திருடன் மெதுவாக உள்ளே வந்தான். அவன் கையிலே ஒரு கத்தி வைத்திருந்தான். அந்தக் குருவைப் போய் மிரட்டினான்.

சத்தம் போடாதே! மரியாதையாக உன்னிடம் இருக்கின்ற பணத்தைக் கொடுத்துவிடு. இல்லை என்றால் கொன்றுவிடுவேன். பணத்தைக் கொடுக்கிறாயா... இல்லை ஒரே குத்தாக குத்தட்டுமா?" என்று கேட்டான்.

அந்தப் பெரியவர் நிமிர்ந்து பார்த்தார்.

"இதோ பாரப்பா... என்னைத் தொந்தரவு செய்யாதே. அதோ பார் அந்த மேசை மேலேதான் பணம் இருக்கிறது எடுத்துக்கொள்!" என்று சொல்லிவிட்டு மறுபடியும் படிக்க ஆரம்பித்துவிட்டார்.

அந்தத் திருடன் அவர் சொன்னது மாதிரியே மேசையை நோக்கிப் போனான்.

பெரியவர் தலை நிமிராமல் புத்தகத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னார். "எல்லாத்தையும் எடுத்துக்கொண்டுப் போயிடாதே.. கொஞ்சம் மிச்சம் இருக்கட்டும் நாளைக்கு வரி கட்ட வேண்டி இருக்கிறது" என்று கொஞ்சம்கூட அலட்டிக்காமல் சொன்னார். இவருடைய நிதானம், பதற்றமின்மை, அமைதி இதையெல்லாம் பார்த்த அந்தத் திருடனுக்கு ஆச்சரியமாய்ப் போனது!

இருந்தாலும் அதையெல்லாம் வெளியிலே காட்டிக் கொள்ளவில்லை! அவர் சொன்னது மாதிரியே கொஞ்சம் பணத்தை மிச்சம் வைத்துவிட்டு மீதியை எடுத்துக்கொண்டு அவன் புறப்பட்டான். வெளி வாசலைத் தாண்டினான். இந்தச் சமயம் அந்தப் பெரியவர் சொன்னார்.

"எதை யார் கொடுத்தாலும் "நன்றி" சொல்ல வேண்டும். அதுதானே நாகரிகம்?" என்றார்.

திருடன் திகைப்போடு திரும்பிப் பார்த்தான். "நன்றி!" என்று சொல்லிவிட்டு அவன் நடந்து போய் மறைந்துவிட்டான்.

கொஞ்ச நாட்கள் கழித்து அந்தத் திருடன் ஒரு வழக்கிலே மாட்டிக்கொண்டான். பொலிஸார் விசாரித்தார்கள். பெரியவர் வீட்டிலே திருடியதையும் அவன் ஒத்துக்கொண்டான்.

அந்தப் பெரியவரை சாட்சி சொல்லக் கூப்பிட்டார்கள். அவர் சொன்னார் "என்னைப் பொறுத்த வரைக்கும் இவன் திருடன் இல்லை! அவனுக்கு ஏதோ சிரமம். அதனாலே என்னிடம் வந்தான். பணம் கொடுத்தேன். வாங்கிக்கொண்டு போனான். அவ்வளவு தான்.

போகும் போது என்னைப் பார்த்து "நன்றி" என்று கூட சொல்லிவிட்டுப் போனான். என்னப்பா நன்றி சொன்னாயா இல்லையா?" என்றார். "ஆமாம் சுவாமி சொன்னேன்!" என்றான் திருடன் ஆச்சரியத்தோடு!

வேறு குற்றங்களுக்காக அவன் சிறைக்குப் போனான். கொஞ்சக் காலம் கழித்து வெளியிலே வந்தான்.

வந்த பிறகு நேராக அந்தப் பெரியவரிடம் போனான் "குருவே! என்னை சீடனாக ஏற்றுக்கொள்ளுங்கள்!" என்றான். சீடனாகி விட்டான்.

அந்தக் காலத்திலே இப்படி நல்லவர்களுடைய நடவடிக்கைகளே கெட்டவர்களைத் திருத்தி இருக்கிறது! இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் நடக்குமா?

இந்தக் காலத்து மனிதன் ஒருவன்,

ஒரு குருநாதரைத் தேடிப் போனான்.

"சுவாமி... என்னை உங்கள் சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்!"

"நான் யாரையும் சீடனாக ஏற்றுக்கொள்வதில்லை!" என்றார் அவர் "ஏன் சுவாமி?" என்று கேட்டான் இவன்.

"சீடனாக வருபவர்களெல்லாம் கொஞ்சநாளிலே குருநாதரை விரட்டிவிட்டு அவர் ஸ்தானத்திலே உட்கார்ந்து விடுகிறார்கள். அதுதான் எச்சரிக்கையாக இருக்க வேண்டி இருக்கிறது"

"அது எப்படி சுவாமி... அவ்வளவு உறுதியாக சொல்கிறீர்கள்" என்றான் இவன்.

"நானே இங்கே அப்படி உட்கார்ந்தவன் தான்!" என்றார் அவர்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வட மாகாணத்தில் கடல் வள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அறிவினை மேம்படுத்துவதன் அவசியம்

இந்து சமுத்திரத்தின் முத்து என சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படும் நாடு இலங்கைத் திருநாடாகும். இதன் மகுடமாக விளங்குவது வட மாகாணம் அது யாழ்ப் பாணம். வவுனியா .மன்னார். முல்லைத்தீவு . கிளிநொச்சி என ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பாகும். வடமாகாணமானது வளமான கடல்சார் வளங்களும் மீன்பிடித் தொழிலின் முக்கியத்துவத்தாலும் தனிப்பட்ட இடத்தைப் பெறுகிறது. இந்த மாகாணம் அதன் கடலோரப் பகுதிகளையும் மண்டை தீவு. அனலை தீவு. காரைதீவு. நெடுந்தீவு. நயினாதீவு. ஊர்காவற்றுறை. தலைமன்னார் போன்ற தீவுகளையும் கொண்டு பல்வேறு மீன்கள் கடல் சார் உயிரினங்கள் மற்றும் உயிரியல் வளங்களை வழங்குகிறது. 1983ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த மீன்பிடி உற்பத்திக்கு வடமாகாணம் 41% ஆன பங்களிப்பை வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஒரு கடல்சார் மையம் (Mar aine hub) ஆகக் கருதப்படுவது ஏனெனில் கடல் வளங்களைப் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பல்வேறு கடல்சார் தொடர்புடைய தொழில்கள் மற்றும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் இடமாகும். இது மீன்பிடி. கடற்தொழில்கள். கடல்சார் ஆராய்ச்சி. கடல் பாதுகாப்பு. துறைமுகங்கள். கடல்சார் பொருட்களின் சந்தைப்படுத்தல் மற்றும் கடல்சார் சுற்றுலா போன்ற பல துறைகளுக்கு செல்வாக்கை ஏற்படுத்துகின்றது. இதில் வடமாகாணம் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றமைக்கு காரணம் கடல்சார் வளங்களாக நாம் கருதும் கடல்சார் உயிரினங்களான மீன்கள். கடலாமைகள். இறால். நண்டு. முருகை கற்பாறைகள். கனிய வளம். உப்பு உற்பத்தி. கடல் சாதாழைகள்(sea weed) என அடுக்கிக் கொண்டே செல்லக் கூடிய ஏராளமான வளங்கள் வடமாகாணத்தில் காணப்படுகின்றன.

ஆனால் இவை தொடர்பான போதிய அறிவு இன்மை காரணமாக அவ்வளங்களை சிறப்பாக பயன்படுத்த முடியாமல் அதாவது அதி உச்ச பயன்பாட்டைப் பெற முடியாமல் பயனற்று போகின்றது. வடமாகாணத்தில் மீன்பிடி முக்கிய வருவாய் மூலமாக உள்ளது. அதிகளவில் மஞ்சள் நக்கு (yellow fin tuna). வாளை மீன். திருக்கை. நண்டு. இறால். கணவாய். சிப்பிகள் என்பன பிடிக்கப் படுகின்றன. அதற்காக பலவிதமான கப்பல்களும் படகுகளும் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும் மற்றைய நாடுகள் போன்ற வளம்மிக்க பாதுகாப்பான முறைகளின் பயன்பாடு குறைவு. இது ஏன்?

வடக்கு மாகாண கடல் பரப்பை சூழ பலவிதமான முருகைக்கற்பாறைகள் காணப் படுகின்றன. இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன் இருந்த பவளப்பாறைகளில் 30 % மாத்திரமே தற்போது காணப்படுகின்றன.தகாத சூழல் காரணி மாற்றங்களால் வெளிறல் ஏற்பட்டு அற்றுப் போயின. மற்றும் மனித தலையீடுகளால் உதாரணமாக சுற்றுலாச் செயற்பாடுகளால் அழிக்கப்படுகின்றன. இதற்கு காரணம் என்ன ?

எனினும் இதே போன்ற கடல் பரப்பைக் கொண்ட கிழக்கு மாகாணம். தெற்கு மாகாணம். சிங்கார கொழும்பைக் கொண்ட மேல் மாகாணங்களில் சுற்றுலாத்துறை மேம்பட்டு இருக்கிறது. வடமாகாணத்தில் சுற்றுலாத்துறை சார்ந்த வருமானம் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்து காணப்படுவது ஏன்?

வடமாகாணத்தில் ஒரு சர்வதேச விமான நிலையம். பல படகு இறங்கு துறைகள் (lan ding centers) காணப்படுகின்றன. அத்துடன் அயல் நாடாகிய இந்தியாவிற்கும் எமது வட மாகாணத்திற்கும் இடையே 32km இடைவெளியே கொண்ட பாக்கு நீரிணை உள்ளது. இருந்தபோதும் கடல்சார் உணவுப் பொருட்கள். அலங்கார மீன் வளர்ப்பு உயிரினங்கள் என அனைத்தும் போக்குவரத்து செலவை அதிகரித்து மேல்மாகாணம் வரை கொண்டு சென்று ஏற்றுமதி செய்யப்படுவதன் காரணம் என்ன?

கடல் சாதாழைகள் வளர்வதற்கான வெப்ப நிலை. கடல் அலையின் வேகம். நீரின் உவர் தன்மை. காலநிலை என அனைத்தும் சாதகமாக இருந்த போதிலும் அவை உயர் ஏற்றுமதி தரத்தில் விளைவிக்கப்படாமைக்கான காரணம் என்ன? இவ்வாறு ஏன்? என்ன? எதற்கு? என பல கேள்விகளை எழுப்பிக் கொண்டே செல்லலாம். ஆனால் இவை அனைத்திற்கும் ஒரே பதில் வடமாகாணத்தில் வாழ் மக்களுக்கு மீன்பிடி மற்றும் கடல்சார் வளங்கள் பற்றிய அறிவியலில் நாட்டம் இல்லாமையும் அவை தொடர்பான தகவல்கள் மீனவர்களுக்கு மட்டுமே உரித்தானது என்ற எண்ணப்பாடுகள் என்றால் மிகையாகாது.

இது தொடர்பான கல்வியறிவு தேவை என உணர்ந்த இலங்கை அரசாங்கம் உலக வங்கிகளின் முதலீட்டின் கீழ் க.பொ.த சாதாரண தர பரீட்சை பாடத்தொகுதி 3இல் நீருயிரின வளத்தொழில்நுட்பவியல் எனும் பாடத்தை அறிமுகப்படுத்தியது. எத்தனை மாணவர்கள். ஆசிரியர்கள். பெற்றோர்களுக்கு இது தெரிந்திருக்கிறது? ஏன் இதனை வாசிக்கும் உங்களுக்கு இந்தத் தகவல் தெரியுமா என சிந்தித்துப் பாருங்கள். அதற்கு மேலதிகமாக மிக அண்மையில் தற்போதைய அரசாங்கத்தின் கல்வி கொள்கை மற்றும் பாடத்திட்ட மாற்றங்களுக்கான முன்மொழிவில் க.பொ.த உயர்தரத்தில் நீரியல் மற்றும் மீன்பிடியியல் விஞ்ஞானம் சேர்க்கப்பட்டுள்ளமையானது அவற்றிற்கான முக்கியத்துவம் காலம் கடந்து உணரப்பட்டுள்ளது என்பது கண்கூடு.

மேலே குறிப்பிட்டது போல வடமாகாணத்துடன் ஒப்பிடுகையில் மேல் மற்றும் தென் மாகாணங்களில் மீன்பிடி மற்றும் கடல்சார் வள விஞ்ஞானத்திற்கும் தொழில்நுட்பத்திற்கும் அதிக அக்கறையும் முக்கியமும் கொடுத்தமையே சுற்றுலாத்துறையிலும் பொருளாதாரத்திலும் முன்னிலை வகிக்க இன்னுமொரு காரணம் எனலாம். தென் மாகாணத்தில் ருகுணு பல்கலைக்கழகத்திலும் மேல்மாகாணத்தில் பல தனியார் கல்வி நிறுவனங்களிலும் இப் பாடநெறிக்கு முக்கியத்துவம் கொடுத்து குறிப்பாக ருகுணு பல்கலைக்கழகத்தில் கடல்வளத்துறையை ஒரு பீடமாக தரமுயர்த்தி அதிக எண்ணிக்கையான மாணவர்களை உள்ளெடுத்து அவர்களுக்கு இது தொடர்பான பயிற்சியும் ஊக்கமும் அளிக்கப்பட்டு அவர்களை பல ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்துவது எடுத்தியம்பக்கூடிய காரணங்களில் ஒன்று. தற்போது ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்திலும் கூட நீருயிரின வள தொழில்நுட்ப பாடநெறி நகர்ப்புற மற்றும் நீருயிரின வளங்களின் பீடத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.ஆனால் வடமாகாணத்தில் இரண்டு பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. அதனிலும் யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் மீன்பிடியியல் விஞ்ஞானம் ஒரு துறையாகவே காணப்படுகின்றது. அதனிலும் ஆச்சரியம் என்னவென்றால் ஐந்தில் ஒரு பங்கு மாணவர்களே அத் துறையை தேர்ந்தெடுக்கின்றனர். அதனிலும் சிலரே வடமாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களாக இருக்கின்றனர்.மீதி முழுவதும் தெற்கு. மேற்கு பகுதிகளைச் சேர்ந்தவர்களே.

இதெற்கெல்லாம் காரணம் மீன்பிடி மற்றும் கடல்சார் வளங்களின் முக்கியத்துவம் பற்றியதான விழிப்புணர்வு இன்மையும் அதனால் ஏற்படுத்தப்படும் வேலை வாய்ப்பு தொடர்பான பூரண அறிவின்மையுமே ஆகும். பல மாணவர்களிடம் ஏன் மீன்பிடியியல் விஞ்ஞான துறையை தெரிந்தெடுக்கவில்லை என வினவிய போது ஆசிரியர் ஆவதற்கு விலங்கியல் மற்றும் தாவரவியல் பாடங்கள்தெரிவில் இருக்க வேண்டும் என பதிலளிக்கின்றனர். இன்னும் சிலர் மீன்பிடியியல் விஞ்ஞானத் துறையை தெரிவு செய்து மீன்பிடிக்கப் போகிறேனா? என வினவுகிறார்கள். விஞ்ஞான பீடத்தில் உயிரியல் விஞ்ஞான பாட நெறியை தொடர்ந்தால் பெரும்பாலும் ஆசிரியர்தான் ஆகலாம் எனும் எண்ணம் மாணவர்கள் மனதில் விதைக்கப்பட்டிருக்கிறது. மீன்பிடியியல் விஞ்ஞானம் கற்பதால் பல்வேறு கோணங்களில் வேலை வாய்ப்பை பெறலாம் என்பதற்கும் அப்பால் சுய தொழிலில் வாய்ப்புக்களை பெருக்கலாம் என்பதனை மாணவர் மனதில் விதைக்க மறந்து விடுகிறார்கள்.

மீன்பிடி விஞ்ஞானத் துறையால் அந்தப் பாடநெறியை தொடர்வதால் கிடைக்கும் நன்மைகள். வேலைவாய்ப்புக்கள் தொடர்பான தெளிவூட்டலை பல்கலைக்கழக மட்டத்திலுள்ள அறிஞர்கள் வழங்குவதில் தவறக்கூடாது. அத்துடன் இத்துறைசார் பட்டபின்படிப்புகளுக்கான புலமைப் பரிசில்கள் மற்றும் அவற்றுக்கான தயார்படுத்தல்களையும் மாணவரிடையே கலந்துரையாடி அவர்களுக்கான பாதையை காட்டுவதில் முன்னிற்க வேண்டும்.

வட மாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் காணப் படுகின்றது. அங்கு மீன்பிடி கடல்சார் வளங்கள் தொடர்பான டிப்ளோமாக்களும் சான்றிதழ் கற்கை நெறிகள் என பல குறுகிய கால கற்கை நெறிகள் கற்பிக்கப்படுகின்றன. ஆனால் அதன் மூலம் நன்மை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவு என்று கூறலாம் . ஆனால் தற்போது சமுத்திர பல்கலையில் பயிலும் மாணவர் தொகை அதிகரித்து செல்கின்றது. ஆகவே வருங் காலத்தில் வட மாகாணமும் சுற்றுலா மற் றும் மீன்பிடி கடல்வள பொருளாதாரத்தில் முன்னிலை வகிக்க வேண்டுமானால் வட மாகாணத்தில் வாழும் மக்களுக்கும் மாணவர்களுக்கும் கடல்சார் வளங்கள் அவற்றின் முக்கியத்துவங்கள் பற்றி எடுத்து கூற வேண்டும். இக் கற்கை நெறி மூலம் கிடைக்கும் வேலை வாய்ப்புக்களும் நன்மைகளும் பற்றி தெளிவு படுத்தப்பட வேண்டும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் இப்பாடத்துறை சார்ந்த முக்கியத்துவம் அறிந்து இது ஒரு பீடமாக மாற்றப்பட்டால் சிறப்பு பட்டம் பெறும் ஒவ்வொரு மாணவரும் ஈடுபடும் ஒவ்வொரு ஆராய்ச்சியும் கடல்சார் வளங்கள் மீன்பிடித் துறை. கடல்நீர் மாசடைதலும் முகாமைத்துவமும். நிலத்தடி நீர் முகாமைத்துவம் என பல பரப்புகளிலும் பல புதிய திருப்புமுனைகளை கொண்டு ஒரு மாற்றம் கொண்டு வரலாம்.

எம்மிடம் கொட்டிக் கிடக்கும் வளங்களை அள்ளி எடுத்து பயன் பெற வேண்டும். தென்மாகாணத்தையொட்டிய கடல் பரப்பில் காணப்படும் மங்கனீசு எனும் கனிய வளத்திற்காக இந்தியா. பங்களாதேஷ் போன்ற நாடுகள் போட்டிபோடுகின்றன. ஆனால் அதை வைத்திருக்கும் நம் நாடு கைகட்டி வேடிக்கை பார்க்கிறது. அதே போன்ற நம் வடமாகாணத்தை சூழவும் எத்தனையோ வளங்கள் காணப்படுகின்றன. சொந்தம் கொண்டாட வேண்டிய மண்ணை வளப்படுத்தாமல் நம் வளங்களை அயல் நாடுகள் பயன்படுத்துவதை இன்னும் எத்தனை காலம் தான் வேடிக்கை பார்க்க போகிறோம். பொறுத்தது போதும் இனிவரும் சந்ததியாவது மீன்பிடியியல் விஞ்ஞானம் மற்றும் கடல்சார் வளம் தொடர்பான அறிவினை மேம்படுத்துவதில் குறியாகச் செயற்படுத்துவோமாக.

இந்தியா கடல் சாதாழைகள் வளர்ப்பு. இழைய வளர்ப்பு (tissue culture) தொடர்பான ஆராய்ச்சிகளை வடமாகாணத்தில் செய்கின்றது. நம் நாட்டு வளங்களைப் பயன்படுத்தி அவர்கள் பயன்பெறுகின்றனர். எனவே நமக்கான துறைசார் ஆளணிகளை உருவாக்கி நம் கடல்வளங்களின் உச்சபயன் நிலைத்து நீடித்து நிற்கும் வகையில் கையாள கற்றுக்கொள்ளவோம்.

அக்ஷயா சஷிராஜ்
2ஆம் வருட மாணவி,
விஞ்ஞான பீடம் ,
யாழ் பல்கலைக்கழகம்.

# இராசிபலன்

23.08.2025
ஆவணி 07, சனிக்கிழமை
அமாவாசை பிற்பகல் 12.24 மணி வரை

மகம் பின்னிரவு 2.26 மணிவரை
சுப நேரம் 3.05- 4.35 மணிவரை
இராகு காலம் 9.05-10.35 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம்
உத்தராடம்.

வளவன்

**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் குடும்பப் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்வார்கள்.

**ரிஷபம்** உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மிதுனம்** இழுபறிகாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** புதிய பொருள் செயற்கையுண்டு, உங்கள் கருத்துக்களுக்கு கௌரவம் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவர், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதயம் பெறுவீர்கள், சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயன சுக குறைவுண்டு.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** செய்தொழில் வளர்ச்சிக்கு எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**தனுசு** அரைகுறையாக இருந்த காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதாசீனப்படுத்தயவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், போசன சுகமுண்டு.

**மகரம்** பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தினரிடையே தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்.

**கும்பம்** மதி நுட்பத்தால் மகத்தான காரியங்களை செய்து செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே ஒற்றுமை கூடும், போசக சுகமுண்டு.

**மீனம்** உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள்.

இனிய இதமான சொற்களை மட்டும் பயன்படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 850





அத்தையைக் கண்டு பிடித்து விட்டோம். அவளை விடுவித்து அழைத்துப் போக வேண்டாமா?"

"இப்போது அது முடியாத காரியம், பூங்குழலி! பல்லக்கு எங்கே போய்ச் சேர்கிறது என்று பார்த்துக் கொள்வோம். பிறகு யோசித்து விடுதலை செய்வதற்கு வழி தேடலாம்."

"தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்க வேண்டும் என்கிறாயே? அதெல்லாம் முடியாது. இப்போது அத்தையை விடுதலை செய்தாக வேண்டும். உனக்குப் பயமிருந்தால் நீ சும்மா இரு!"

"விடுதலையாவதற்கு உன் அத்தை சம்மதிக்க வேண்டாமா? பல்லக்கில் ஏறி ஜாம் ஜாம் என்று போய்க் கொண்டிருக்கிறாள். எங்கே போகிறாள் எதற்காக, யார் அவளைப் பிடித்து வரச் செய்தது என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"பாதாளச் சிறைக்குக் கொண்டு போகிறார்களோ, என்னமோ? அப்புறம் நம்மால் என்ன செய்ய முடியும்?"

"ஏன் முடியாது? பாதாளச் சிறையில் நானே இருந்து வெளி வந்தவன்தான். அரண்மனைகளில் எனக்கும் கொஞ்சம் செல்வாக்கு உண்டு. உன் அத்தையை எப்படியாவது நான் விடுதலை செய்கிறேன் இப்போது நீ சும்மா இரு!"

பூங்குழலியும் அச்சமயம் பொறுமையுடன் சும்மா இருக்கத்தான் வேண்டும் என்று தீர்மானித்தாள். அப்போது அவர்கள் சிறிதும் எதிர்பாராத காரியம் ஒன்று நிகழ்ந்தது.

மூடுபல்லக்கின் விலகிய திரை இன்னும் நன்றாய் விலகுவது போலிருந்தது. அதன் உள்ளிருந்து ஓர் உருவம் வெளியே வந்தது. சத்தம் சிறிதுமின்றிப் பூனை நடப்பது போல் நடந்தது. அடுத்த விநாடி அவர்கள் அருகில் வந்து விட்டது. இவ்வளவும் நல்ல இருட்டில் நடந்தபடியால், மண்டபத்தின் அடிப் படிகளில் நின்ற காவலர்கள் கண்ணில் படவில்லை. பல்லக்கிலிருந்து வெளிவந்தவள் ஊமை ராணிதான் என்பதைப் பூங்குழலி அந்த இருளிலும் நன்றாய்த் தெரிந்து கொண்டு விட்டாள். ஊமை ராணி அந்த இரண்டு பேரின் கைகளையும் பிடித்து இழுத்துக் கொண்டு அம்மண்டபத்தின் பின் பகுதிக்கு விரைந்து சென்றாள்.

பூங்குழலியைத் தழுவிக் கொண்டு உச்சிமுகந்து, அவளைப் பார்த்ததில் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள். பின்னர், அத்தைக்கும் மருமகளுக்கும் சமிக்ஞை பாஷையில் சிறிது நேரம் சம்பாஷணை நடந்தது. அந்தக் காரிருளில் அவர்கள் ஒருவருக்கொருவர் எப்படித் தான் பேசிக் கொண்டார்களோ? ஒருவர் கருத்தை ஒருவர் எவ்வாறு தான் தெரிந்து கொண்டார்களோ? அது நம்மால் விளங்கச் சொல்ல முடியாத காரியம்.


பூங்குழலி சேந்தன் அமுதனிடம், "அத்தை சொல்லுவது உனக்குத் தெரிந்ததா? என்னைப் பல்லக்கில் ஏறிக் கொண்டு போகச் சொல்கிறாள். அவளை உன் வீட்டுக்கு அழைத்துப் போகச் சொல்லுகிறாள்!" என்றாள்.

"உன் சம்மதம் என்ன பூங்குழலி?" என்று அமுதன் கேட்டான். "அத்தை சொல்லுகிறபடி செய்யப் போகிறேன். ஆளைப் பிடித்துக் கொண்டு வரச் சொன்னவர்கள் இன்னார் என்று தெரிந்து கொள்வதற்கு சரியான உபாயம் அல்லவா?" (தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## திருட்டுப் பட்டம்



மகாத்மா காந்தி நினைவுப் பள்ளியில் அடுத்த வாரம் பள்ளி ஆண்டு விழா வருகிறது. அந்த விழாவிற்கு புதிதாக வந்திருக்கும் பொலிஸ் அதிகாரி ஜீவானந்தம் அவர்கள் விருந்தினராக வருகிறார் என்று பள்ளி தலைமையாசிரியர் அறிவித்தார்.

அங்குள்ள மாணவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. ஏனென்றால் ஜீவானந்தம் அவர்கள் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்த மூன்று மாதத்திலேயே பல நல்ல செயல்களை செய்து புகழ் பெற்று விட்டார். அந்த ஊரில் அதுவரை தொடர்ந்து நடந்து வந்த வழிப்பறிகள், கொள்ளைகள் போன்ற தீய செயல்களை பெருமளவு குறைத்து விட்டார்.

அது மட்டுமல்ல அவருடைய மகன் ராம் பிரசாத் இந்த பள்ளியில் தான் ஏழாம் வகுப்பில் சேர்ந்துள்ளான். இதனால் மாணவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ராம் பிரசாத்துடன் நட்பு வைக்க நான் நீ என்று போட்டி கூட நடந்தது.

ராம் பிரசாத் பெற்றோர் பரம்பரையாகவே பணக்காரர்களாக இருந்ததால் கொஞ்சம் செலவாளியாக இருந்தான். மற்றபடி அமைதியான மாணவன். அவன் உட்கார்ந்திருக்கும் பெஞ்சில் மோகன், சாமிநாதன் என்று இரு மாணவர்கள் உட்கார்ந்திருந்தனர். மூவரும் நல்ல முறையில் நட்புடன் இருந்தனர். மோகனின் அப்பாவும் நல்ல உத்தியோகத்தில் இருந்தார். அதனால் மோகனும் தினமும் காரில் தான் பள்ளிக்கு வந்து இறங்குவான்.

சாமிநாதனின் அப்பா ஒரு சாதாரண உத்தியோகத்தில் இருந்தார். சாமிநாதனுக்கு ஒரு தம்பியும், தங்கையும் இருந்தனர். இவர்கள் மூவரையும் படிக்க வைக்க அவன் அப்பா மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

சாமிநாதனும் அப்பாவின் கஷ்டம் தெரிந்ததால் ஆடம்பரமாக இருப்பதைத் தவிர்த்தான். தினமும் அவனிடம் இருந்த பழைய சைக்கிளிலேயே பள்ளிக்கு வந்து கொண்டிருந்தான்.

இன்னும் மூன்று நாட்களில் பள்ளி ஆண்டு விழா வருவதால், அப்பொழுது நடக்கும் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மாணவ, மாணவிகளுக்கு பயிற்சிகள் நடந்து கொண்டிருந்தன. இதனால் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மாணவர்களும், மாணவிகளும் பயிற்சிகளுக்கு அடிக்கடி வகுப்பை விட்டு வெளியே சென்று வந்து கொண்டிருந்தனர்.

ராம் பிரசாத்தும், மோகனும், பேச்சுப் போட்டியிலும் நடனப் போட்டியிலும் கலந்து கொண்டிருந்தனர்.

அதனால் அவர்கள் இருவரும் சாமிநாதனிடம் அவர்கள் புத்தகப் பையைப் பார்த்து கொள்ள சொல்லி விட்டு பயிற்சிக்கு சென்றனர். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விதி மட்டும் தான் தருணத்திற்காக காத்திருக்கும்... நாளை அது எவ்வாறு மாறும் என்பதை எவராலும் ஊகிக்க முடியாது...

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## பாண்டவர்கள் வெல்வதாயின் வீஷ்மரை முதலில் வீழ்த்த வேண்டும்

இதிகாசங்கள் உணர்த்துகின்ற தத்துவங்களை இப்போது யார்தான் உய்த்துணரப்போகிறார்கள்.

ஆனாலும் இந்த உலகை வழிப்படுத்தும் பொருட்டு எழுந்த இதிகாசங்கள் கூறும் தத்துவங்கள் ஒருபோதும் தோற்றதாக வரலாறு இல்லை.

ஆம், கிருஷ்ண தூது நடந்தபோது பாண்டவர்களுடன் யுத்தம் நடத்துவதென்ற தீர்மானத்தை துரியோதனன் கைவிட்டிருக்க வேண்டும்.

சரி அதைத்தான் செய்யவில்லை எனும் போது, போருக்கு உதவி கேட்டு அருச்சுனனும் துரியோதனனும் கிருஷ்ண பரமாத்மாவிடம் சென்றபோது, முதலில் சென்ற துரியோதனன் துயில் கொள்ளும் கிருஷ்ணரின் தலைமாட்டில் இருந்தான்.

அதேவேளை பின்னர் சென்ற அருச்சுனன் கிருஷ்ணரின் கால்மாட்டில் உட்கார்ந்திருந்தான்.

கிருஷ்ணன் விழித்தெழுகிறார். அருச்சுனனை முதலில் கண்டு அவனை ஆரத் தழுவுகிறார். பின்னர் தலைமாட்டில் துரியோதனன் இருப்பதை அருச்சுனன் கிருஷ்ணருக்கு உணர்த்த, அதன் பின்னர் துரியோதனனை ஆரத்தழுவி இருவரும் வந்த நோக்கம் பற்றி கிருஷ்ணர் வினவுகிறார்.

குருஷேத்திரத்தில் நடக்கப்போகும் போரில் கிருஷ்ணன் தங்கள் பக்கம் நிற்க வேண்டும் என இருவரும் கேட்கின்றனர்.

அதற்கு கிருஷ்ணர்; நான் முதலில் கண்ணுற்றது அருச்சுனனை என்பதால், அருச்சுனனின் கோரிக்கைக்கு முதலிடம்.

ஆகையால் பாண்டவர்களுக்கு என்னைக் கொடுத்து, துரியோதனனுக்கு என் படையைத் தருகிறேன் என்கிறார் கிருஷ்ணர்.

ஆம், இதன்போதாவது துரியோதனன் போரை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அவன் அதைச் செய்யவே இல்லை. இதுவே போரில் கௌரவ சேனை அழிவதற்குக் காரணமாயிற்று.

இங்கு கிருஷ்ண பரமாத்மா பாண்டவர் பக்கம் நிற்பதன் காரணமாகப் போர் வெற்றி கிடைத்தது என்பதற்கு அப்பால் போர் வியூகத்தைக் கிருஷ்ணர் வகுத்துக் கொடுத்ததனாலேயே பாண்டவர்கள் வெற்றி வாகை சூடினர்.

உண்மை. போரில் பாண்டவர்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டுமாயின், வீஷ்மரை முதலில் களப் பலியாக்க வேண்டும். வீஷ்மர் வீழ்ந்துவிட்டால், பின்னர் எல்லாம் வாய்ப்பாகிவிடும். ஆம், அந்த முடிவுதான் பாண்டவர்களுக்கு வெற்றியைத் தந்தது. இதை நாம் கூறும்போது, இப்போது இது எதற்காக என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஆம், இந்த நாட்டின் ஆட்சித் தலைவர்களாக இருந்தவர்கள் இழைத்த குற்றங்களுக்காக அவர்களைக் கைது செய்வதென்றால், முதலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்ய வேண்டும்.

அது இப்போது நடந்தவகையில், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்காக முக்கிய கைது ஒன்று நடக்கப் போவது உறுதி செய்யப்படுகிறது என அனுமானிக்கலாம்.

# பருத்தித்துறை நகரின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையிடும் படை முகாம்கள்

## உடன் அகற்றக்கோரி திங்களன்று போராட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரின் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள இராணுவ முகாம் மற்றும் கடற்படை முகாமை அகற்றக் கோரி நாளை மறுதினம் திங்கட்கிழமை (25) பருத்தித்துறை நகரில் பொதுமக்கள், வர்த்தகர்கள், கடற்தொழிலாளர்கள் எனப் பலரது பங்களிப்புடன் அமைதி வழி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது நகரபிதா டக்ளஸ் போல் போராட்டத்துக்கான அழைப்பினை விடுத்தார்.

இப்போராட்டம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட நகர பிதா,

பருத்தித்துறை நீதவான் வாசஸ்தலம், மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம், பருத்தித்துறை தபால் நிலையத்திற்குச் சொந்தமான கட்டிடத்தொகுதி, நகர சபையின் வாடி வீடு மற்றும் தனியாருக்குச் சொந்தமான நிலப்பரப்புக்களை ஆக்கிரமித்து பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவ முகாமானது போருக்குப் பின்னரான நகரின் வளர்ச்சிக்குப் பாரிய தடைக்கல்லாக உள்ளது.

அத்துடன் எமது நகரின் அடையாளமான வெளிச்சவீட்டுப் பகுதி, கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலாத் துறை வளர்ச்சி மற்றும் எமது கடற்தொழிலாளர்களின் தொழிலுக்கும் பாரிய தடையாக உள்ளது.

எமது பருத்தித்துறை நகரின் சொத்தாகக் காணப்படும் நீதிமன்ற வளாகம் இடப்பற்றாக்குறை காரணமாக வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாக வரும் செய்தி எமக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகின்றது. மேற்படி இராணுவ முகாமை அகற்றுவதன் மூலம் நீதிமன்றத்திற்குத் தேவையான இடத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது நகரின் வளர்ச்சியைக் கருதியும் பருத்தித்துறை வாழ் மக்களின் நன்மைகருதியும் மேற்குறித்த இராணுவ, கடற்படை முகாம்களை அகற்றித்தருமாறு வலியுறுத்தி அமைதியான முறையில் முன்னெடுக்கப்படவுள்ள கவனயீர்ப்பு போராட்டமானது பருத்தித்துறை நகர் வர்த்தகர்கள், கடற்தொழில் சமூகம், பொது அமைப்புகள், பொதுமக்கள் ஆகியோரின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த போராட்டமானது நாளை மறுதினம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் இருந்து ஆரம்பித்து பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை இடம்பெறவுள்ளதோடு மேற்குறித்த கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனாதிபதிக்கான மகஜரும் கையளிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை நகரைப் பாதுகாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இப்போராட்டம் மற்றும் பேரணியில் வர்த்தகர்கள், கடற்தொழிலாளர்கள், பொது அமைப்புகள், பொதுமக்கள் மற்றும் பருத்தித்துறை நகரின் வளர்ச்சியை விரும்பும் ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைவரையும் அழைத்து நிற்கின்றோம் என்றார். (ம-7)

## மீன்பிடிக்கச் சென்றவர் கடலில் மூழ்கி உயிரிழப்பு

திருகோணமலை குச்சவெளிப் பகுதியில் உள்ள கடலில் மீன் பிடிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இதில் குச்சவெளி வாழை ஊத்துப் பகுதியைச் சேர்ந்த அப்சான் (வயது - 22) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோனைக்காக திருகோணமலை மாவட்டப் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்துக் குச்சவெளிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## சித்தி விநாயகர் நூல் நிலைய 40 ஆவது ஆண்டு நிறைவு விழா

சித்தாந்த வித்தகர் இலக்கிய கலாநிதி மு.ஞானப்பிரகாசம், மு.கந்தையா ஆகியோரது ஞாபகார்த்த சித்தி விநாயகர் நூல் நிலையத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவானது நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் ஏழாலை மேற்கில் அமைந்துள்ள சரோஜினி பூங்காவில் இடம்பெறவுள்ளது.

சித்தி விநாயகர் நூல் நிலையத் தலைவர் மூ.வைத்தியலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லங்கா தொழில் முயற்சிகள் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி சேவைகள் சங்கத் தலைவர் க.நந்தகுமாரன் அவர்களும் சிறப்புவிருந்தினராக ஓய்வு நிலை நூலகர் க.சௌந்தரராஜா சர்மா அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையை பிரபல ஆசிரியரும் இலக்கியவாதியுமான இரா. செல்வவடிவேல் அவர்கள் ஆற்றவுள்ளார். (ம-7)

## பேராசிரியர் வித்தியானந்தனின் நூற்றாண்டு ஞாபகார்த்த தமிழ் வேள்வி நாளை

(யாழ்ப்பாணம்)

தமிழி அமைப்பின் ஏற்பாட்டில் பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தனின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக நடத்தப்படும் "தமிழ் வேள்வி - 2025" நிகழ்வானது நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் கூவர் அரங்கில் இடம்பெறவுள்ளது.

தமிழி அமைப்பின் பெருந்தலைவர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா அவர்களும் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் மேனாள் துணைத்தூதர் ஆறுமுகம் நடராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வை மேலும் சிறப்பிக்கும் வண்ணம் வரவேற்பு ஆற்றுகை, தப்பு இசை முழக்கம், நடன ஆற்றுகை, நூற்றாண்டு மலர் வெளியீடு, அண்ணாவிமார் கௌரவிப்பு, தனி நடனம், கல்லூரிகளுக்கான திருக்குறள் நூல் வழங்கல், அரிச்சந்திரன் மயான காண்டம் இசை நாடகம் என்பன சிறப்பு நிகழ்வுகளாக அரங்கேறவுள்ளன. (ம-7)

## யாழ்.பொது நூலகத்தில் விசேட செயற்பாடு

யாழ்ப்பாணம் பொது சன நூலகமும் அமெரிக்கன் கோணர் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள Stemfair விசேட செயற்பாடானது நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை யாழ்.பொதுசன நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வயது வேறுபாடின்றி சகலரும் பங்குபற்றிப் பலனடையலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 44

சொக்கன்

மெஷாதின் மரணம், ஈராக்கின் அணுகுண்டுத் தயாரிப்புத் திட்டத்துக்கு இன்னொரு பெரிய அடி. ஃப்ரெஞ்சு விஞ்ஞானிகளின் ஒத்துழைப்புடன் ஓர் அணு உலையை உருவாக்கி, நிறுவி, இயக்கித் தருகிற முக்கியமான பொறுப்புகளையெலலாம் அவரிடம்தான் நம்பி ஒப்படைத்திருந்தார் சதாம் உசேன்.

அதேசமயம், மெஷாத் இறந்த பிறகும் ஈராக் தனது அணு ஆயுதக் கனவுகளை மறக்கவில்லை. மற்ற விஞ்ஞானிகள் அதைச் சுறுசுறுப்பாகத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார்கள். பாக்தாத் அருகில் உள்ள அல்ட்வைதா என்ற இடத்தில் "ஒசிராக்" என்கிற பெயரில் ஒரு முழுமையான அணு ஆராய்ச்சி நிலையம் உருவாகத் தொடங்கிவிட்டது.

இதனால், இஸ்ரேலுக்குப் பதற்றம் அதிகரித்தது. அவர்களும் மொஸாட் மூலமாக என்னென்னவோ தில்லாலங்கடி வேலையெல்லாம் செய்து பார்த்து விட்டார்கள், பருப்பு வேகவில்லை. "எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலும், நான் அணுகுண்டு செய்யாமல் விடமாட்டேன்" என்று ஒற்றைக் காலில் நிற்கிறார் சதாம்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இஸ்ரேல் விமானப் படையினர் ஒரு வழி சொன்னார்கள், "பேசாமல் அந்த ஒசிராக் அணு உலைமேல குண்டு வீசித் தகர்த்துவிட்டால் என்ன?"

"செய்யலாம். ஆனா, அதனால் நிறைய அப்பாவி மக்கள் செத்துப் போவாங்க, அதன் பின்பு எந்த நாடும் நம்மை ஆதரிக்காது" என்றார் மொஸாட் தலைவர் யிட்ஜக் ஹோஃபி, அதுமட்டுமில்ல, ஒசிராக்ல நிறைய வெளிநாட்டு விஞ்ஞானிகள் வேலை பார்க்கிறார்கள். அவர்கள் உயிருக்கு ஏதாவது ஆபத்து என்றால் அது பெரிய சர்வதேசப் பிரச்சினையாகிவிடும். மொசாட் இப்படிச் சொன்னதும் விமானப் படையினருக்கு எரிச்சல் தங்களுடைய வீரத்தை அவர் மட்டம் தட்டுகிறார் என்று நினைத்து கோபித்துக் கொண்டார்கள்.



அப்போது, மொஸாட் துணைத் தலைவர் நாஹூம் அத்மோனி சத்தமாகப் பேச ஆரம்பித்தார். "ஈராக்கோட அணு உலையை நாம் அடிச்சாகணும், அப்போதுதான் மற்றைய அரபு நாடுகள் எல்லாம் அணு ஆயுதம் தயாரிக்க ஆசைப்படாமல் இருப்பார்கள். அதற்காக என்றாலும் நாம் ஒசிராக்கைத் தாக்கியே தீரணும். ஆனால் அதே நேரம் அந்தத் தாக்குதலால் மக்கள், விஞ்ஞானிகள், மற்றைய ஊழியர்கள் யாருடைய உயிருக்கும் ஆபத்து வரக்கூடாது. அணு உலையைமட்டும் குறிவைத்து அழிக்க வேண்டும்.

"அதான் எப்படி?" ஞாயிற்றுக்கிழமையாப் பார்த்து அடிப்போம்" என்றார் நாஹூம் அத்மோனி, அன்றைக்கு ஆராய்ச்சியாளர்களுக்கெல்லாம் லீவு சாயந்திர நேரம் என்றால் இன்னும் வசதி, கட்டட வேலை செய்கின்ற மேஸ்திரிங்கள், சித்தாளுங்கள் கூட இருக்க மாட்டார்கள், ஒசிராக் அணு உலை மொத்தமும் காலியாகத்தான் இருக்கும்.

நாஹூம் அத்மோனியின் யோசனையை எல்லோரும் பாராட்டிக் கொண்டிருந்தபோது, யிட் ஜக் ஹோஃபி குறுக்கிட்டார், "கொஞ்சம் பொறுங்கள், இந்த விடயத்தில அவசரப்படுவது ரொம்பத் தப்பு.

"இனிமேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது மிஸ்டர் ஹோஃபி, ஃப்பிரான்ஸ் இல் இருந்து அணு குண்டு தயாரிப்பதற்கான மூலப் பொருட்களெல்லாம் ஒசிராக்குக்கு வரப்போகிறதாக தகவல் கிடைச்சிருக்கு, அதுக்குள்ள நாம் அவர்களை மறுபடி எழுந்திருக்க முடியாதபடி அடிச்சாகணும்."

யிட் ஜக் ஹோஃபி அரை மனதோடு உட்கார்ந்தார். அவ்வளவுதான், இனிமேல் இவர்களை யாரும் தடுக்கமுடியாது.

உடனடியாக இந்தத் திடீர்த் தாக்குதலுக்காக இஸ்ரேல் பிரதமர் மெனாகெம் பெகிளிடம் அனுமதி பெறப்பட்டது. தேவையான விமானங்கள், வெடிகுண்டுகள் திரட்டப்பட்டன. கச்சிதமான வரைபடம் தயாரிக்கப்பட்டது.

*1981 ஜூன் 7ஆம்* திகதி மதியம், எட்டு இஸ்ரேல் போர் விமானங்கள் ஈராக்கை நோக்கிப் பறக்க ஆரம்பித்தன. இவற்றைப் பாதுகாப்பதற்கும், வழியில் உள்ள நாடுகளின் ராடர்களை ஏமாற்றுவதற்கும் இன்னும் சில விமானங்களை உப்புக்குச் சப்பாணியாக ஆட்டத்தில் சேர்த்துக் கொண்டார்கள். மற்றப்படி அந்த எட்டு விமானங்கள்தான் மெயின்.

சுமார் இரண்டரை மணி நேரம் கழித்து, இந்த விமானங்கள் ஈராக் எல்லைக்குள் ரகசியமாக நுழைத்தன.

அங்குள்ள அதிகாரிகள் என்ன நடக்கிறது என்று உணர்வதற்குள், ஒசிராக் அணு உலையைக் கண்டுபிடித்து அதன்மீது குண்டு மழை பொழிய ஆரம்பித்தார்கள்.

சில நிமிடங்கள்தான், ஒசிராக் வெறும் காங்க்ரீட் குவியலாகி விட்டது. ஈராக்கின் அணு ஆயுதக் கனவு முழுவதுமாகத் தகர்ந்துபோனது. மொஸாட் இரண்டு முறை அரைகுறையாகச் செய்த வேலையை, இஸ்ரேல் விமானப் படையினர் மொத்தமாக முடித்து விட்டார்கள்.

அத்துடன், மொசாட்டில் ஹிட்ஜக் ஹோஃபியின் செல்வாக்கும் முடிவுக்கு வந்தது. இனிமேல், அங்கே நாஹூம் அத்மோனியின் ராஜ்ஜியம் தான்!

**25. புலி வால்**

உளவுத்துறை என்பது, சிகரெட், விஸ்கி, போதைமாதிரியான சமாசாரம்.

ஆரம்பத்தில் அது ஒரு நல்ல சிலாக்ஸேஷன் என்று தோன்றும், எப்போதாவது தம் மடித்தால், தண்ணியடித்தால் ஆனந்தமாக இருக்கும், அந்த நேரங்களில் நம்முடைய திறமைகள், தகுதிகள் திடீரென்று அதிகரித்துவிட்டது போல் கொஞ்சம் பெருமையாகக்கூட உணர்வோம், அப்புறம் நம்முடைய சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பி வந்துவிடுவோம்.

ஆனால் ஒரு கட்டத்துக்குமேல் இந்தப் பழக்கம் நம்மைப் பிடித்துக்கொண்டுவிடும். அதன்பிறகு அங்கிருந்து வெளியே தப்பி வருவது மிக மிகச் சிரமம். புலி வாலைப் பிடித்தது போல் பின்னாலேயே ஓடிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

பெரும்பாலான நாடுகளின் உளவுத் துறைகளும் இப்படிதான் சிறிய அளவில் தொடங்குகின்றன. "யாராச்சும் திடீர் என்று நம்மை அடிக்கவந்தால் என்ன செய்வது? அதற்குத்தான் முன்கூட்டியே எச்சரிக்கையா இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு ஆரம்பிப்பார்கள்.

தங்களுடைய விரோதி நாடுகளில் மட்டும் உளவு நெட்வேர்க் அமைப்பார்கள். அங்கிருந்து வரும் தகவல்களைக் கவனமாகப் படித்து ரிப்போர்ட் தயாரித்துப் பிரதமர் அல்லது ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பார்கள்.

எதிராளிக்குத் தெரியாமல் அவர்களுடைய ரகசியங்களைத் திருடுவது ஒரு மிகப் பெரிய திறில். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியானுக்கு...

எதிர்வரும் 6ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ம-7)

## வாந்தி எடுத்த...

சிவலிங்கம் ஜெயலட்சுமி (வயது-61) என்பவரே மரணமடைந்தவராவார்.

மேற்படி குடும்பப் பெண் கொலண்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கந்தர்மடத்தில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை (22) அதிகாலை வாந்தி எடுத்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் சில மணித்தியாலங்களில் அவர் உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## காலில் வீக்கம்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (21) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60,104)

## அரியாலையில்...

குறித்த பெண் நேற்று வெள்ளிக்கிழமை (22) காலை தனக்குத்தானே தீமூட்டி உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## யாழ்ப்பாணம்...

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் பெருமளவு வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் மலசலகூடத் திற்கு குழி வெட்டியபோது, சந்தேகத்திற்கு இடமான பொதி காணப்பட்டமையால், அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் வந்து பொதியினைப் பார்வையிட்ட பின்னர், அது தொடர்பில் யாழ்.நீதவான் நீதிமன்று அறிவித்து, அகழ்வுப் பணிக்கு அனுமதி பெற்றனர்.

இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு பொதிகள் மீட்கப்பட்டன.

குறித்த பொதிகளில் இருந்து ரி-56 ரக துப்பாக்கிகள் 30 மற்றும் அவற்றுக்குரிய 5ஆயிரம் ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த ஆயுதங்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (ம-7,33,104)

## அரச நிதியை...

செய்யப்பட்டதையடுத்து, இந்தக் கடிதத்தை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பணியாற்றிய காலப்பகுதியில் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக நேற்றுக் காலை அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானபோது கைது செய்யப்பட்டார்.

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகத் தெரிவித்து இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்தே ஐக்கிய தேசியக் கட்சி குறித்த நகலை வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஜான் ராஃப்டெரி கையொப்பமிட்ட அழைப்பிதழ் முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க மற்றும் முதல் பெண்மணிக்கு அனுப்பப்பட்டது.

மேலும் 2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22ஆம் திகதி வோல்வர்ஹம்டன் பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த பட்டமளிப்பு விழா மற்றும் மதிய உணவு விருந்துபசாரத்தில் பங்கேற்றது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அரச நிதியை முறையற்ற முறையில் பயன்படுத்தவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது. (ம-7)

## ரணிலின்...

புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது வழக்கின் தீர்ப்பை அரை மணி நேரத்திற்கு ஒத்திவைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

மாலை 5.30 மணியளவில் நீதிபதியின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனினும் அதன் பின்னர் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. (ம-7)

## ரணிலின் கைது...

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது எக்ஸ் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

இந்தப் பதிவில் முன்னாள் ஜனாதிபதி கைது செய்யப்படுவதற்கு முன்னர் ஒரு யூரியூபரால் அதைக் கணிக்க முடியுமா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் இந்தச் சம்பவம் தற்செயலாக நடந்திருக்க முடியாது என்றும் இந்தக் கைது முன்னரே திட்டமிடப்பட்டிருக்கலாம் எனவும் அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றிருந்தால் சட்டம் ஒழுங்கு போன்ற உன்னதமான தொரு விடயம் மலிவான நாடகக் காட்சியாக மாறும் சோகமான நாளாக இன்றைய நாள் இருக்கும் என அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நாடகரும் யூரியூப்பருமான சுதத்த திலகசிறி தனது யூரியூப் தளத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம

# ரணில் விரைவில் வீடு திரும்புவார்

### மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் வீடு திரும்புவார் என எதிர்பார்ப்பதாக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் தெரிவித்துள்ளார்.

ரணிலின் கைது குறித்து தனது எக்ஸ் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் வீடு திரும்புவார் என்று மிகவும் ஆவலுடன் காத்திருக்கிறேன் என்றுள்ளது. (ம-7)

சிங்க கைது செய்யப்படவுள்ளார் என்று நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ரணிலைத்...

அழைக்கப்பட்டபோதே திலீப பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.08.22 — சீட்டிழுப்பு இலக்கம் 5929 — C 9 3 2 1 6 7 — அத சம்பத C 2 1 6 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0504

சுப தவசக — 2025.08.22 — 0045 — துலாம் 15 18 50 53

தன நிதானய — திகதி -2025.08.22 — சீட்டிழுப்பு இலக்கம் - 1959 — E 07 10 38 59 E — 48768

மெகா பவர் — திகதி 22/08/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2277 — T 23 19 59 61 73

ஜய — திகதி 2025.08.22 — 0197 — C 0 1 9 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4171 — சீட்டிழுப்பு திகதி 22.08.2025 — W 26 33 36 60 — W

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.08.22 — சீட்டிழுப்பு இலக்கம் 1238 — துலாம் 19 28 47 59 துலாம் — 14323

உத்தியோகபூர்வ முடிவுகள் — 22.08.2025 — 0637 — M — 0 1 3 5 7 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,566,316.40

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2903 — சீட்டிழுப்பு திகதி 2025.08.22 — தினம் வெள்ளிக்கிழமை — 09 22 32 56 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,914,547.20

சனிதா — திகதி 22.08.2025 — வெற்றி வாரம் 5064 — 10 22 57 66 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,393,862.00

சசிரி — 0753 — 22.08.2025 — வெள்ளிக்கிழமை — 04 21 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

சீட்டிழுப்பு வாரம் 4615 — சீட்டிழுப்பு திகதி 22.08.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 07 13 14 30 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,244,953.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — 2079 — 22.08.2025 — R 15 12 20 50 56 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.589,404,584.20

அட கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் : 2729 — சீட்டிழுப்பு திகதி : 2025.08.22 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.84,720,780.00 — 11 20 35 45 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை வரலாற்றில்

# முன்னாள் ஜனாதிபதி ஒருவர் கைதாகும் முதல் சந்தர்ப்பம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதானது, இலங்கை வரலாற்றில் ஒரு முன்னாள் ஜனாதிபதி கைது செய்யப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாகப் பதிவாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டு கியூபாவில் நடந்த G77 உச்சிமாநாட்டிலிருந்து ரணில் விக்கிரமசிங்க திரும்பி வரும் வழியில் இங்கிலாந்து பயணமானார்.

அவரது மனைவி, வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகவே ரணில் இங்கிலாந்து பயணமாகியிருந்தார்.

சி.ஐ.டியின் தகவலின்படி லண்டன் பயணத்தினால் அரசாங்கத்திற்கு சுமார் ரூ. 16.9 மில்லியன் செலவாகியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாதத் தொடக்கத்தில் விசாரணையின் ஒரு பகுதியாக முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏகநாயக்க மற்றும் முன்னாள் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இது தொடர்பில் வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

இந்நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

# வெலிக்கடைச் சிறைச்சாலையில் ரணில் விக்கிரமசிங்க அடைப்பு



வெலிக்கடைச் சிறைச்சாலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடைக்கப்பட்டுள்ளார்.

நேற்று (22) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-7)

## முன்னாள்...

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ பயணம் தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்காக நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு (FCID) நேற்றுச் சென்றிருந்த நிலையில் கைது செய்யப்பட்டார்.

166 இலட்சம் ரூபா பொதுமக்கள் பணத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார்.

இதன் பின்னர் கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிணை வழங்கப்பட்டது.

குறித்த பிணை தொடர்பில் மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரல் திலீப்ப பீரிஸ் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து குறித்த பிணை வழங்கலில் இழுபறி நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் பலத்த இழுபறிக்குப் பின்னர் இரவு 10 மணியளவில் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-7)


## மாப்பிள்ளை தேவை

01. சுதுமலை, இந்து, 1982, உத்திரட்டாதி, Certified Public Accounting (USA) ,Charted Accountant, USA Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 38499
02. புங்குடுதீவு - சாவகச்சேரி, இந்து, 1990, மகம், Advanced Dip.Account,Accountant,Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 38484
03. மீசாலை - புலோலி, இந்து, 1991, அவிட்டம், Bsc Hons Soft ware Engineering, Singapore Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34791
04. சங்கானை - கே.கே.எஸ், இந்து, 1998, அத்தம், Bsc Accounting With Economics, Germany + UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34476
05. இளவாலை - காரைநகர், இந்து, 1990, அவிட்டம், Master Of Science In Business and Economics,Switzerland Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34366
06. காரைநகர், இந்து, 1999, அத்தம், Business and Finace, Graduate,Uk Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34362
07. கரவெட்டி, இந்து, 1995, அவிட்டம், LLB University Of (Australia),Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34194
08. யாழ்., இந்து, 1994, அனுஷம், BSc Engineering, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34178
09. காரைநகர், இந்து, 1992, சித்திரை, Msc in Strategic Marketing (UK), Phd,Canada Citizen அழகான பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 54115
10. தெல்லிப்பழை - நல்லூர், இந்து, 1994, பூரட்டாதி, MBBS, MD, Doctor, USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 36611

நீங்களே www.thaalee.comஇல் பார்த்து உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். (5116)

S.Sharma J.P www.thaalee.com 077 539 3728

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

UK - 1320/= Australia - 2220/=
France - 2080/= Canada - 2570/=
Germany - 1920/= மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி (1475)

## பணியாளர்கள் தேவை

காட்வெயார் கடையில் விற்பனையில் அனுபவமுள்ள, பழக விரும்பும் பணியாளர்கள் தேவை.
தங்களது வதிவிடச் சான்றிதழ் மற்றும் தகைமைச் சான்றிதழுடன் நேரில் சமூகம் தரவும். (C-3713)
குரு காட்வெயார்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: •கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-3723)

## காணி விற்பனைக்கு

K.K.S றோட் முகப்புடன் 1 ¾ பரப்புக் காணி விற்பனைக்கு (மருதனார்மடம் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி 300m தூரத்தில்) 30 அடி அகலமும் 160 அடி நீளமும் கொண்டது.கடைகளுக்கு பொருத்தமானது. (5109)
விலை : 52 மில்லியன்
077 082 1010

## வேலையாட்கள் தேவை

புத்தூரில் இயங்கும் அரைக்கும் ஆலை ஒன்றிற்கு வேலை ஆட்கள் (ஆண்) தேவை. (1479)
077 373 5261

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 168/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 240/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | Max 3Kg |
| 1Kg நீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2650/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 188/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 260/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1100/= | |
| 1Kg கடலை | - 380/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |

400g Anchor 1140/= ~~1260/=~~ Max 01
1Kg Sunlight 280/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1480)
Happy Supermarket 07[illegible]8280 30

## ஓட்டோ சாரதி தேவை

60 வயதிற்கு மேற்பட்ட ஓட்டோ சாரதி ஒருவர் தேவை. தெல்லிப்பழை, கீரிமலை, அளவெட்டி, மல்லாகம் ஆகிய இடங்களில் வசிப்போர் விரும்பத்தக்கது. (1476)
077 609 6581

## வேலைவாய்ப்பு

BEST SOLUTION
Market Lane Avarangal
Type Setting, Photo copy
வேலைகளுக்கு முன் அனுபவம் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம் (5113)
076 845 9286

## காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மானிப்பாய் பிரதான வீதிக்கும் மிக அண்மையில் அமைந்துள்ள ஏறத்தாழ 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. காணி வாங்க விரும்புவோர் மட்டும் விற்பனையாளருடன் நேரடித் தொடர்பு கொள்ளவும். (C-243)
077 726 0194

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-3723)
UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org